விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

கிளை நூலகம்

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

*சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 13 திங்கட்கிழமை (30.10.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 315*

## மின்னல் தாக்கி மூவர் பலி

(கொழும்பு)

மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி மூவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இம்பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை வீரகெடிய, மெதமுலன பிரதேசத்தில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. வயலில் வேலை செய்து கொண்டிருந்த போதே குறித்த மூவ 23☛

## மகிந்த ராஜபக்ஷ அணியின் எதிர்ப்பால் நாடாளுமன்றின் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை மீதான விவாதம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதன்போது நாடாளுமன்றுக்கு வெளியில் மகிந்த அணி ஆர்ப்பாட்டம் மற்றும் கறுப்புக் கொடிப் போராட்டம் என்பவற்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இன்று நாடாளுமன்ற சந்தியில் காலை 9.00 மணிக்கு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் தேசிய அமைப்பாளர் ரஞ்சித் சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இதனால் நாடாளுமன்ற வளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்பைப் பலபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அரண்களை அமைக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு 23☛

## தாய், 3 பிள்ளைகளின் இறுதிச் சடங்குகள் நேற்று நடந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அரியாலை பகுதியில் நிதிக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக மன உளைச்சலுக்கு உள்ளாகி தற்கொலை செய்துகொண்ட குடும்ப பெண் மற்றும் அவரது 24☛

# புதிய அரசியல் யாப்பின் நடவடிக்கை குழுவின்
# இடைக்கால அறிக்கையை விவாதிக்க
# இன்று கூடுகிறது நாடாளுமன்றம்

*(கொழும்பு)*

*புதிய அரசியலமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக விவாதம் நடத்துவதற்காக நாடாளுமன்றம் இன்று அரசியல் அமைப்பு சபையாக கூடவுள்ளது. இன்று ஆரம்பமாகும் இந்த விவாதம் நாளை மற்றும் நாளை மறுதினம் என தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது. தினமும் காலை 10.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை இந்த விவாதம் இடம்பெறும்.*

*(23ஆம் பக்கம் பார்க்க)*

## அரசியல் கைதிகள் விவகாரம் இன்று அல்லது நாளை தீர்வு




### சிவாஜிலிங்கம் நம்பிக்கை

(கரணவாய்)

இன்று அல்லது நாளை அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம்நிறைவுக்கு வரும்என நம்பிக்கை வெளியிட்டார் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம். 23☛

## விமர்சகர்கள் கூறுவதை கேட்க வேண்டியதில்லையாம்!



### மாவை கூறுகிறார்

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பிற்கான இடைக்கால அறிக்கை தொடர்பாக அரசியல் விமர்சகர்கள், சட்டத்தரணிகள் பல்கலைக்கழக கல்வியாளர்கள் கூறுகின்ற கருத்துக் 23☛

## சில தினங்களுக்கு மழை நீடிக்கும்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை அடுத்துவரும் சில தினங்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, அம்பாறை மற்றும் அம் 24☛

## துப்பாக்கிச் சூட்டில் நால்வர் பலி

(கொழும்பு)

கொஸ்கொட பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (விரிவான செய்தி 15ஆம் பக்கம்) (மு-11)

### யாழ். பல்கலைக்கழக சமூகம்
## இன்று முதல் கதவடைப்பு போராட்டத்தில் குதிக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் கோரிக்கைக்கு தீர்வினை வழங்குவதாக ஜனாதிபதியால் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படாமல் ஏமாற்றப்பட்டதன் எதிரொலியாக இன்று 23☛

## சைட்டம் மருத்துவ கல்லூரி நேற்றுக் கலைக்கப்பட்டது

(கொழும்பு)




சைட்டம் தனியார் பல்கலைக்கழகம் நேற்று கலைககப்பட்டது. அரச தகவல் திணைக்களத்தினால நேற்று வெளியிடப்பட்ட அறிகை யிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. (விரிவான செய்தி 3ஆம் பக்கம்)

## அரசியலமைப்பை உருவாக்க கூட்டமைப்பு ஆதரவளிப்பது முக்கிய விடயம் - ரணில்

(கொழும்பு)

இந்த நாட்டில் இரண்டு பிரதான கட்சிகள் முதல் முதலாக ஒன்றிணைந்து அரசியல் யாப்பை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இந்த வேளையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும்




வடக்கு, கிழக்கு அரசியல் கட்சிகள் இதற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கின்றன.

நாட்டை பிரிக்கும் திட்டமோ அல்லது மக்களின் மொழி, உரிமை, மத உரிமையை பாதிக்கும் அளவில அரசியலமைப்பு திட்டம் 23☛

### உயிரிழந்தவரின் நண்பனை அழைத்து
## கொழும்பில் இருந்து வந்த விசேட பொலிஸ்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

அரியாலை மணியம்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் கொழும்பில் இருந்து சென்ற விஷேட பொலிஸ்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இத் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த நபருடன் மோட்டார் சைக்கிளில சென்ற மற்றைய நபரினை சமபவ இடத்திற்கு அழைத்து சென்று விசாரணைகளையும் குறித்த 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை கட்டட திறப்பு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நடைபெற இருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் இந் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந் நிகழ்வு இடம்பெறும் புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். (மு-10)

# தபால் பிரதி அமைச்சர் டுலீப் விஜயசேகரவிடம் அமைச்சுப் பறிப்பு



தபால் சேவைகள் பிரதியமைச்சர் டுலீப் விஜயசேகர உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி செயலகம் நேற்று இரவு அறிவித்தது. (மு-11)


எமது மக்களின் சுகாதாரப் பராமரிப்பு சேவையில் பத்தாம் ஆண்டில் தடம்பதிக்கும் சுகவாழ்வுக்கான பயணம்

JOURNEY FOR HEALTHY LIFE

சுகாதார பராமரிப்பு சேவைகள்

Health Care Services



உள ஆற்றுப்படுத்தலுடன் கூடிய பராமரிப்பு...
உங்கள் இல்லங்களிலேயே உங்களின்
வயோதிபப் பெற்றோர், நோயாளிகளைப்
பராமரிக்க எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
"அன்பான பாதுகாப்பான பராமரிப்பு"

(1158)

கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி
T.P:-0776203797, 0766038596

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து புவனேந்திரராஜா



விக்கினேஸ்வரா வீதி, நிற்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து புவனேந்திரராஜா 25.10.2017 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற செல்லையா-இலட்சுமி தம்பதிகளின் மருமகனும், சுமர்நிதாவின் பாசமிகு கணவரும், கேன்சிகா, வஜிந்தன், மதுபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன் (கொலண்ட்), பிரேமதாஸ் (ஆசிரியர்), பார்த்திபன், அரியதாஸ், பகீரதன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகிலகுமார், காலஞ்சென்ற சபேஸ்குமார், யசோதரன், ரஜனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 31.10.2017 அன்று மு.ப 10.00-12.00 வரை பிரான்சில் Boule vard Du.General Lecle r.c 92110 Clichy Franceஇல் நடைபெற்று 71.Rue des Rondeaux 75020 paris france எனும் இடத்தில் பி.ப 1.00-2.30 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிற்சாமம், சங்கானை
0775446787, 0774670843 (1174)

தகவல்:- சகோதரர்கள்

## பாலகிருஷ்ணன் விஜிகரன் (கரன்)

(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)



வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வீதியை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தாழையடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் விஜிகரன் 28.10.2017 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பாலகிருஷ்ணன் (சின்னப்பு)-விக்னேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், சுப்பிரமணியம்-மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுதர்சினி (சுகந்தி)யின் அன்புக் கணவரும், கவிஷான், இந்துசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தன், கேதீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2017) திங்கட்கிழமை வட்டுக்கோட்டையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானசம்பந்தர் வீதி,
வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை. (1182)

தகவல்:-குடும்பத்தினர்
0773107711, 0212051337, 0778613966

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

புத்தூர் வடக்கு, சுன்னாகம் வீதியைச் சேர்ந்த ரவீந்திரராசா-விஜயதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## ரவீந்திரராசா கேசவன்



2017-ம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உடுவில் மகளிர் கல்லூரியில் 179 புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றமைக்காக பாராட்டுவதுடன் அவர் மேலும் கல்வியில் மேலோங்கி வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(156)

"ராசபவனம்"
புத்தூர் வடக்கு,
மருதடி, புத்தூர்.

வாழ்த்துவோர்:-
க.இராசதுரை
(அம்மையா குடும்பம்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.நல்லையா ரஞ்சித்குமார்



திருமதி கலைச்செல்வி ஞானசேகர்



திருமதி கலைவாணி ஜெயரட்ணம்

(சி-208)

கல்வி அமைச்சினால் 23.10.2017 திங்கட்கிழமை பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்பட்ட சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றுக் கொண்ட எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமாகிய

**திரு.நல்லையா ரஞ்சித்குமார்**

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் யா/இந்துக் கல்லூரியில் வழங்கப்பட்ட சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றுக்கொண்ட எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும் கிளிநொச்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகருமாகிய

**திருமதி கலைச்செல்வி ஞானசேகர்**

வட மாகாண கல்வித் திணைக்களத்தால் யா/இந்து மகளிர் கல்லூரியில் வழங்கப்பட்ட சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றுக்கொண்ட எமது கல்லூரியின் ஆசிரியை

**திருமதி கலைவாணி ஜெயரட்ணம்**

சிறந்த ஆசிரியருக்கான "பிரதிபா பிரபா" விருதினைப் பெற்றுக்கொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணையைத் தவிர்க்கவே 3 தமிழ் அரசியல் கைதிகளும் உண்ணாவிரதப் போராட்டம்

## அநுராதபுரம் சிறைக் கண்காணிப்பாளர் நீதிமன்றில் அறிக்கை வழக்கு விசாரணையின் பின்னர் உணவை எடுக்கின்றனராம்




(கொழும்பு)

நீதிமன்ற விசாரணைகளைத் தவிர்க்கவே அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள மூன்று தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுப்பதாக சிறைச்சாலைக் கண்காணிப்பாளர் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுத்துவதற்கு முதல்நாள் உணவை மறுக்கும் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் வழக்கமாக உணவை எடுத்துக் கொள்கின்றனர் என்றும் சிறைச்சாலை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சட்டமா அதிபர் தரப்பில் நீதிமன்றில் முன்னிலையான அரச சட்டவாளர் குசுன் சரத் சந்திர, மற்றும் மாதவ தென்னக்கோன் ஆகியோர், அநுராதபுர நீதிமன்றில் இருந்து வவுனியா நீதிமன்றத்துக்கு வழக்கை மாற்றக் கோரி வெளியாரின் தூண்டுதலின் பேரிலேயே, மூன்று சந்தேகநபர்களும், உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர்.

நியாயமான அடிப்படையிலேயே, இந்த வழக்கு வவுனியாவிலிருந்து அநுராதபுர நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதாகவும், இதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் காரணமல்ல என்றும், சாட்சிகளுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தவே, வழக்கு மாற்றப்பட்டதாகவும், தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு எவருக்கும் அதிருப்தியாக இருந்தால், போராட்டங்களை நடத்துவதை விட்டு விட்டு, மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிட முடியும் என்றும் அரசசட்டவாளர் குறிப்பிட்டார்.

வழக்கை இடமாற்றம் செய்வதற்கு போராட்டங்கள் உதவமாட்டாது என்றும், அவர் தெரிவித்துள்ளார். நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதோடு டிசெம்பர் 5ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. (இ-7)

# ரஷ்ய புரட்சியாலேயே இலங்கை மக்களுக்கும் சுதந்திரம் கிடைத்தது

## டியூ.குணசேகர சுட்டிக்காட்டு




(கொழும்பு)

தமது கட்சி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையே இந்த புதிய அரசியலமைப்பு சட்டம் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

வி.ஐ.லெனினால் ஆரம்பிக்கப்பட்ட ரஷ்யப் புரட்சியின் ஊடாகவே இலங்கையில் வாழ்கின்ற மக்களும் விடுதலையும் உரிமையும் பெற்றவர்களாக வாழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்ய புரட்சியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு ஹற்றன் - கிறிஸ்துவ தொழிலாளர் முன்னணியின் மண்டபத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக ரஷ்ய புரட்சியின் பிரகடனத்தை 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி சேர். பொன்னம்பலம் அருணாச்சலம் கொண்டு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்கள் ஆகிய தாங்கள் உரிமைக்காவும், சுதந்திரத்திற்காகவும் சக்தியுடன் போராடக்கூடிய தமது நண்பர் ரஷ்யாவில் இருக் கின்றார்கள் என லெனினை சுட்டிக்காட்டிய அவர், லெனின் ஆதரவைக் கொண்டு உரிமையை வென்றெடுக்க தயங்க மாட்டோம் எனவும் குறிப்பிட்டதாக டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

ரஷ்ய புரட்சியை உலகளவில் பரவ செய்த வி.ஐ. லெனின் முதல் கோரிக்கையாக அனைத்து நாட்டு மக்களும் நாடுகளும் சமாதானத்துடன் வாழ வேண்டும்.

ரஷ்ய புரட்சியையே இந்தியாவும் தமது சுதந்திர முன்னேற்ற பாதைக்கு பயன்படுத்தியுள்ளது.

ஆகையால் சுதந்திர புரட்சியை முன்னெடுத்த லெனினுக்கு உலக நாட்டு தலைவர்களில் முதல் வாழ்த்துச் செய்தி சேர் பொன்னம்பலம் உட்பட இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தி ஆகியோர் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது எனவும் முன்னாள் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# போராட்டங்களுக்கு வெற்றி சைட்டம் பல்கலை கலைப்பு!

(கொழும்பு)

சைட்டம் தனியார் பல்கலைக்கழகம் கலைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 3 பக்கங்களைக்கொண்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சைட்டம் நிறுவனம் கலைக்கப்படுவதுடன், அதனை சட்ட ரீதியாக இலாபம் ஈட்டாத நிறுவனமாக மாற்றுவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சைட்டம் நிறுவன மருத்துவபீடம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தீர்ப்புகளே நேற்று வெளியாகியுள்ளன.

இதில் சைட்டம் நிறுவனத்தை இரத்து செய்வதற்கான பரிந்துரையை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு முன்வைத்துள்ளது.

இதற்கமைய சைட்டம் நிறுவனத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் இலாபத்தை இலக்காக கொள்ளாத புதிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சைட்டம் நிறுவனத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய, இலங்கை மருத்துவ சபையின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த மாணவர்கள் அரச வைத்தியசாலைகளில் பயிற்சிகளைப் பெறுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சைட்டம் நிறுவனத்திற்கு புதிதாக மருத்துவ மாணவர்களை இணைத்துக்கொள்ளும் பணி தொடர்ந்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான குறைந்தபட்ச தரநிர்ணயங்கள் அடங்கிய வர்த்தமானி, சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிர்வாகத்தின் கீழ் கண்காணிக்கப்படும் எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


சைட்டம் தனியார் பல்கலைக்கழகத்தை தடை செய்யுமாறு வலியுறுத்தி கடந்த 2 வருடங்களுக்கும் மேலாக அரச பல்கலைக்கழக மாணவர்கள், பெற்றோர்கள் என அனைவரும்பல போராட்டங்களை நடத்தினார்கள்.

நாடளாவிய ரீதியில் உண்ணாவிரதம், போராட்டங்கள், பேரணி என அனைத்தையும் அரச பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்திருந்தார்கள். ஒவ்வொரு முறையும் போராட்டம்நடத்தும்போது பல் கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரின் தாக்குதல்களுக்கு உள்ளாகினார்கள்.

பெண்கள், ஆண்கள் மற்றும் பௌத்த துறவிகள் என அனைவரையும்இதன்போது பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

இந்த நிலையில் சைட்டம் பிரச்சினை நாட்டில் பூதாகரமான ஒன்றாக மாறியது. இதையடுத்து சைட்டம் தொடர்பான இறுதி தீர்மானத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே சைட்டம் தனியார் பல்கலைக்கழகம் தடை செய்யப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# விமல் வீரவன்சவிடமுள்ள குண்டை செயலிழக்கச்செய்ய வேண்டும்



(கொழும்பு)

விமல் வீரவன்ச போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தையே குண்டுவைத்து தகர்க்க வேண்டும் என்று கூறுகின்ற செயற்பாடானது, இலங்கை ஜனநாயகத்தைக் கேள்விக் குறியாக்குகின்ற விடயமாகும்.

இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். உடன் இவ்வாறானவர்களின் கருத்துக்களுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு அவர்களை உடன் கைது செய்து அவர்களிடமிருக்கின்ற குண்டுகளைக் கைப்பற்றி செயலிழக்கச் செய்து மக்கள் பிரதிநிதிகளைக் காப்பற்ற வேண்டிய பொறுப்பு பாதுகாப்பு அமைச்சினதும், சட்டம் ஒழுங்கு அமைச்சினதும், செயற்பாடாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மார்க்கண்டு நடராசா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம்குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# வர்த்தமானி அறிவித்தல் கிடைத்ததும் தேர்தல் ஆணைக்குழு சாட்டையை சுழற்ற ஆரம்பித்துவிடும்-மொஹமட்

(கொழும்பு)

வர்த்தமானி அறிவித்தல் தேர்தல் ஆணைக்குழுவின் கையிலே கிடைத்ததும் தேர்தல் ஆணைக்குழு சாட்டையைச் சுழற்ற ஆரம்பித்து விடும் என தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் கலப்புத் தேர்தல் முறை சட்ட ஏற்பாடுகள் பற்றி பொது மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்வு கிழக்கு ஏறாவூர் அல் முனீறா மகா வித்தியா லய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கலப்புத் தேர்தல் முறையில் உள்ள சில ஏற்பாடுகள் சர்ச்சைக்குரிய விடயங்களாக இருக்கலாம். ஆனாலும் அவை இந்த நாட்டின் ஒரு கோடி 86 இலட்சம் வாக்காளர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளினால் சட்டமாக்கப்பட்டவையாகும்.

எனவே இது கட்டாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவையாகும்.

தேர்தல் ஆணைக்குழு சட்டத்தை இயற்றுவதில்லை. சட்டத் திருத்தம் செய்வதுமில்லை. தேர்தல் ஆணைக்குழு நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலேயே கவனத்தைச் செலுத்தும்.

அதேவேளை, எல்லை நிர்ணயம் சம்பந்தமாக உருவாக்கப்பட்டுள்ள ஆவணத்தில் உள்ள அச்சுப் பிழைகளையும் இன்ன பிறதவறுகளையும் திருத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்குமோ! என்ற ரென்ஷன் எகிறிய கான்பூர் போட்டியில் பும்ராவின் 'வேகத்தால்' இந்தியாவுக்கு தொடர் வெற்றி வசமானது




கான்பூர் ஒருநாள் போட்டியில் அனல் பறநதது. பதற்றமான கடைசி கட்டத்தில், நியூசிலாந்து வீரர்களின் அதிரடியான ஆட்டத்தால் 'என்ன நடக்குமோ' என விழிபிதுங்கி தத்தளித்த இந்திய ரசிகர்களுக்கு, பும்ரா உற்சாகம் கொடுத்தார்.

இவரின் உத்வேகமான பந்துவீச்சால் இறுதி வரை துணிச்சலாக போராடிய இந்திய அணி, 6 ஓட்டங்களால் 'திரில்' வெற்றி பெற்றதுடன், தொடரையும் 2-1 என்ற கணக்கில் வென்றெடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டிகள் முடிவில் தொடர 1-1 என சமநிலையில் இருந்தது.

இந்நிலையில் 3ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று உ.பி.,யின் கான்பூர் கிறீன் பார்க் மைதானத்தில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இரு அணியிலும் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

### தவான் ஏமாற்றம்

இந்திய அணிக்கு தொடக்கத்திலேயே 'அதிர்ச்சி' காத்திருந்தது. சௌதி 'வேகத்தில்' தவான் (14) ஆட்டமிழந்தார். பின், ரோகித், அணித் தலைவர் ஹோலி இணைந்து மிரட்டினர். இவர்களின் அசத்தல் ஆட்டம் கைகொடுக்க, அணி 25 ஓவர்களில் 134 ஓட்டங்களை எட்டியது. அபாரமாக விளையாடிய ரோகித் ஒரு நாள் அரங்கில் 15ஆவது சதம் எட்டினார். வேகம், 'சுழல்' என இரண்டையும் அடித்து நொருக்கிய இந்த ஜோடியை பிரிக்க முடியாமல் நியூசிலாந்து பந்துவீச்சாளர்கள் விரக்தி அடைந்தனர்.

### ஹோலி சதம்

இவ் இணை 2ஆவது விக்கெட்டுக்காக 230 ஓட்டங்கள் சேர்த்திருந்தபோது, சான்ட்னர் 'சுழலில்' ரோகித் சர்மா (147 ஓட், 18 பவுண்டரிகள், 2 சிக்ஸர்) ஆட்டமிழந்தார். சான்டனர் பந்தை ஒரு ஓட்டத்துக்கு தட்டிவிட்ட ஹோலி, 32ஆவது சதம் கடந்தார். பாண்ட்யா (8) ஒற்றை இலக்கில் திரும்பினார். சௌதி 'வேகத்தில்' ஹோலி (113 ஓட்.) ஆட்டமிழந்தார்.

அதன்பின் தோனி, ஜாதவ் இணைந்து அதிரடி காட்டினர். போல்ட் வீசிய 48ஆவது ஓவரில் இருவரும் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். தோனி 25, ஜாதவ் 18 ஓட்டங்கள் எடுத்தனர்

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்கள் எடுத்தது. தினேஷ் கார்த்திக் (4) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

### அபார ஆரம்பம்

கடின இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு கப்டில், முன்ரோ ஜோடி அதிரடி ஆரம்பம் கொடுத்தது. பும்ரா பந்தில் கப்டில் (10) ஆட்டமிழந்தார். பாண்ட்யா பந்துவீச்சில் வில்லியம்ஸன் இரண்டு பவுண்டரி அடிக்க, 10 ஓவரில் 74 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து.

### திருப்பம் தந்த சகால்

இந்திய பந்துவீச்சை தொடர்ந்து சிதறடித்த இருவரும் அரை சதம் கடந்தனர். இவர்களை பிரிக்க, சகாலை அழைத்தார் ஹோலி. இதற்கு கைமேல் பலன் கிடைத்தது. இவரின் 'சுழலில்' முன்ரோ (75) கிளம்ப, இந்திய ரசிகர்களுக்கு உற்சாகம் பிறந்தது. மீண்டும் தனது மந்திர பந்துவீச்சால் திருப்பம் தந்தார் சகால். வில்லியம்ஸனையும் 64 ஓட்டங்களில் வெளியேற்றி அசத்தினார்.

பும்ரா பந்தில் அனுபவ ரெய்லர் (39) நடையைக் கட்டினார். லெதம், நிக்கோலஸ் ஜோடி சாதுர்யமாக ஓட்டங்கள் எடுத்தது.

### 'ஹீரோ' பும்ரா

கடைசி 5 ஓவர்களில் நியூசிலாந்து வெற்றிக்கு 50 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த 'டென்ஷனான' நேரத்தில் புவனேஷ்வர் பந்தில் நிக்கோலஸ் (37) போல்டானார். அடுத்த ஓவரில் பும்ராவின் 'த்ரோவில்' ஆபத்தான லெதம் (65) ரன்- அவுட்டாக, இந்தியாவின் வெற்றி வாய்ப்பு பிரகாசமானது. சான்ட்னரையும் (9) பும்ரா வெளியேற்ற.

நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 331 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. கிராண்ட் ஹோம் (8), சௌதி (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்தியா சார்பில் அதிகபட்சமாக பும்ரா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகன் விருதை இந்தியாவின் ரோகித் சர்மா வென்றார்.

### அடுத்து என்ன?

இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் மோத உள்ளன. முதல் போட்டி டில்லியில் வரும் நவம்பர் 1ல் நடக்கவுள்ளது. அடுத்தடுத்த போட்டிகள் முறையே ராஜ்கோட் (நவ.4), திருவனந்தபுரத்தில் (நவ. 7) நடக்கும்.




## 3வது பிறந்ததின வாழ்த்து

"வதனமஹால்" இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியில் வசிக்கும் எழில்ரஞ்சன் - ஷாமினா தம்பதியரின் கனிஷ்ட புதல்வன்


## ஐதுசணன்

தனது 3ஆவது பிறந்ததினத்தை அவரது இல்லத்தில இன்று வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். அவர் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

நவம் - அம்மப்பா
ஸ்ரீ - அம்மம்மா
தீபன் - மாமா
கஜன் - மாமா
ரகு - பெரியப்பா
கவி - பெரியம்மா
பிருந்தி - அண்ணா
சாயி - அக்கா
கிரோசன் - அண்ணா

(C-212)



# மரண அறிவித்தல்

## கந்தர் தம்பிராசா

சுதுமலை தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் தம்பிராசா 25.10.2017 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சிறி (பிரான்ஸ்), கௌரி, மாலா (ராஜினி, பிரான்ஸ்), ஜெகன் (பிரான்ஸ்), சுதன் (பிரான்ஸ்), கயன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லம்மா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பிராசா, மகாலிங்கம், ஐயாத்துரை, அமரர் இராசதுரை, அமரர் சின்னத்துரை, தம்பித்துரை, துரைராசா, சின்னம்மா, அமரர் திரவியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதா, ராசலிங்கம், ஜெயக்கொடி (றொக்ஷன்), கேமிளா, விஜிதா, சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்வின், அஸ்னாவி, அஸ்ஜனன், கீர்த்தி, சியாந், பிருத்தி, ஜெர்வின், றொக்வின், அக்சியா, றிகேஸ், ஜெனுஷா, றிவியோன், றியோஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2017) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக் 10 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-211)

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளை பரிமாற இலங்கை-ஈரான் விசேட உடன்படிக்கை



(கொழும்பு)

சிறைக் கைதிகளைப் பரிமாறிக் கொள்வதற்கான உடன்படிக்கையில் இலங்கை மற்றும் ஈரான் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த உடன்படிக்கை நேற்று முன்தினம் நீதியமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் சார்பில் அந் நாட்டின் நீதியமைச்சர் அலி ராசா ஆவாயும், நீதியமைச்சர் தலதா அத்துகோரளவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். (இ-7)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
. என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


## பிரதமரின் வாக்குறுதி நிறைவேறியது

### இராதாகிருஷ்ணன் பூரிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மலையக மக்களுக்கு அளித்த வாக்குறுதி இன்று நிறைவேறியது என கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றன் டன்பார் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நுவரெலியா மாவட்ட மக்கள் தமிழ் முற்போக்கு கூட்டணியை நம்பி வாக்களித்து நல்லாட்சியில் முக்கிய பங்கு வகித்தமைக்கான பலனை இன்று அனுபவிக்கின்றோம்.

கடந்த காலம் தொட்டு ஐக்கிய தேசிய ஆட்சி காலத்திலே மலையகத்திற்கு உரிமைகள் கிடைக்க பெற்றுள்ளன.

அந்த வகையில் இந்து கலாசார அமைச்சும் ஐக்கிய தேசிய கட்சியினால் உருவாக்கப்பட்டது.

பின்னர் ஆட்சி மாற்றத்தால் அந்த அமைச்சு திணைக்களமாக மாற்றப்பட்டது. ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியமைத்த பின் மீண்டும் அந்த அமைச்சு எமக்கு கிடைத்தது.

இவ்வாறு ஒரு சமூகத்தின் தேவை அறிந்து சேவை செய்வது ஐக்கிய தேசிய கட்சியே. லயன் வாழ்க்கைக்கு முற்றுபுள்ளி வைக்கும் வகையில் அமைச்சர் திகாம்பரத்தின் பணி சிறந்து முன்னெடுக்கப்படுகின்றது.



அதே போல கல்வித்துறையிலும் பாரிய வளர்ச்சியை இந்த அரசினூடாக முன்னெடுக்க முடிகின்றது.

கடந்த இரண்டு வருடத்தில் 29 மில்லியன் ரூபா நிதியை வழங்கியதுடன் வருகின்ற ஆண்டில் 450 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மலையக சமூகம் தலை நிமிர வேண்டுமாயின் அந்த சமூகம் கல்விச்சமூகமாக மாற வேண்டும்.

ஆகவே தான் 25 பாடசாலைகளைதரமுயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## சோதிடருக்கு "விருது"



யாழ். மாவட்ட சர்வோதயமும் தேசோதயமும் இணைந்து நடாத்திய எம்.ஜி.ஆர். அவர்களின் நூறாவது ஜனன தினத்தன்று கலைஞர்களின் கௌரவிப்பு விழாவில் அரச விருதான "ஜோதிர் வித்யாரத்னா" மற்றும் சமூக சேவைக்கு "சாமசிறிதேச மான்ய" விருதும் பெற்ற சோதிடர் வி.ஆ.சிவராசா அவர்களுக்கு ஆசிரியர், இரா. செல்வவடிவேல் "கலைமாமணி" விருதினை வழங்குவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீமான் ஏ.நடராஜன் அவர்கள் அருகில் நிற்பதையும் காணலாம். சோதிடரின் சேவை மென்மேலும் வளர மனமுவந்து வாழ்த்தி பாராட்டும்,

(179) **"அற்புதா றேடர்ஸ்"**, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
மாதகல்

## ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்: 02
உத்தேச ஆதன இல: 269
வீதி: கீரிமலை வீதி
f puhk Nri t ahs h; gpuP : J/154

வட்டாரம்: 02,கீரிமலை வீதி உத்தேச ஆதன இல.269 இல் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி இளவாலை கோவிற்பற்று சிறுவிளான் இறை "கலவிக்காடு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 33 குளி 16.50 கொண்ட இவ்வாதனம் இரு பகுதிகளாக முன்னர் இருந்துள்ளமையினால் அதில் ஒரு பகுதி இளவாலை பிரதான வீதியைச் சேர்ந்த ஆனந்தராஜா கிறிஸ்ரி சுபராஜ் ஆகிய இவர்களால் இலக்கம் 10 ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவராசா அருள் நிசாந்தன் அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.செ.கனகசபாபதி அவர்கள் முகதாவில் நிறைவேறிய 1594ஆம் இலக்க 12.02.2017ம் திகதிய அறுதி உறுதி மூலமும் மற்றைய பகுதி இளவாலை கல்லூரி வீதியைச் சோந்த கந்தையா நாகேஸ்வரனும் பெண் மரிய எமறென்சியா சத்தியவாணி ஆகிய இவர்களால் மேற்குறிப்பிட்ட இலக்கம் 10 ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவராசா அருள் நிசாந்தன் அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு V.T.M. கதிர்காமநாதன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 16077ஆம் இலக்க 17.03.2017 ம் திகதிய அறுதி உறுதி மூலமும் தனக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. M. சண்முகநாதன் அவர்களால் வரையப்பட்ட 3342ஆம் இலக்க 18.09.2017 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "கலவிக்காடு" நிலப்பரப்பு 33 குளி 16.50 கொண்ட குறித்த ஆதீனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தேவராசா அருள் நிசாந்தன் எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இப் பெயர் மாற்றத்தால் வரும் விளைவுகளுக்கு பிரதேச சபை பொறுப்பாகாது என்பதனையும் அறியத் தருகிறேன்.

செயலாளர்,
வலி.தென் மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(164)




## இராசி பலன்

30.10.2017
(ஐப்பசி 13, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
தசமி பிற்பகல் 3.42 மணிவரை
சதயம் பின்னிரவு 5.13 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சர்வதேச சேமிப்பு தினம் வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம் | | ராகு |
| கேது | | | |
| | சனி புத | சூரி குரு | செவ் சுக் |

**மீனம்**: தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், தூரதேசத்து செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மேடம்**: பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**இடபம்**: தொலைபேசி வழியில் பொன்னான தகவலொன்று வந்து சேரலாம், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு

**மிதுனம்**: உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**: உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்**: உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு மறையும், எடுத்த காரியத்தில் சிறு தாமதம் ஏற்படலாம்.

**மகரம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழிலில் உயர்ந்தவர்களின் ஆதரவு கிடைக்கும், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**: சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு**: அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடன் பிறப்புகள் அனுசரணையாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**: வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்**: தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம்.

**கன்னி**: கூட்டு முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தில் சிறுவர்களுக்கான உளவியல் ஆலோசனை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் உளவியல் ஆலோசனைகளை உளவளத்துறை ஆலோசகர் நவராஜ் வழங்கியிருந்தார்.

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தோப்பு ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக் கோவிலின் பாலஸ்தாபனம் இன்று திங்கட்கிழமை காலை 6.43 மணி தொடக்கம் 7.13 மணி வரையுள்ள சுபவேளை யில் நடைபெறும். (இ-7)

# தனியார் வைத்தியசாலைகள் தரத்தை மேம்படுத்த வேண்டும்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தனியார் வைத்தியசா லைகள் தமது தரத்தினை மேம்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையாற்ற முன் வர வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலா நிதி எஸ்.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தனியார் வைத்திய சாலை ஒன்றில் அண்மையில் கண் சத்திர சிகிச்சை மேற்கொ ண்டு, கிருமி தொற்றுக்குள் ளான 9 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டனர். அதில் நான்கு பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகி ச்சை பெற்று வருகின்றனர். ஏனைய 5 பேரும் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு கண் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைகள் இடம்பெற்று வருகின்றன. பாதிக்கப்பட்டவர்களின் கண் ணில் ஏற்பட்ட தொற்று தொடா பாக பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறான தொற்றுக் கள் இனிவரும் காலங்க ளில் நடைபெறாமல் இருக்க சுகாதார அமைச்சு மிகவும் கரிசனையுடன நடவடி க்கை மேற்கொண்டு வருகி றது. குறித்த தனியார் வைத் தியசாலை போன்று ஏனைய வைத்திய சாலைகளில் இவ் வாறான நடவடிக்கை நடை பெறாமல் இருக்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை இருக் கிறது.

யாழ்.போதனா வைத் தியசாலையிலும் பல நூற் றுக்கணக்கான சத்திர சிகிச் சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் விடயம் தொடர்பில் மிகுந்த அவதானத் துடன் இருக்கின்றோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ச்சியான சிகிச்சை வழங்கப்பட்டு வருவதுடன், தடுப்பு நடவடிக்கைகளை யும் மேற்கொண்டு வருகின் றோம்.

இந்தக் கிருமித் தொற் றுக்கு பல்வேறு வகையான சிகிச்சை மேற்கொள்ளப்பட் டுள்ளது. தனித்தனியான சத்திர சிகிச்சை நிபுணர்கள் உள்ளார்கள். அவர்களின் நிபுணத்துவ நடவடிக்கைக ளுக்கு ஏற்ப சிகிச்சை வழங் கப்பட்டு வருகிறது. குறிப்பி ட்ட 4 பேருக்கும் போதியளவு சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எதிர்வரும் நாட்க ளில் அவர்களுக்கு ஏற்பட்ட நோய்த்தொற்றின் விளைவு பற்றிக் கூறமுடியும்.

வைத்திய சேவைகள் நடைபெறுகின்ற சில சந் தர்ப்பங்களில் எதிர்பாராத சில விளைவுகள் ஆங்கா ங்கே நடைபெற்று வருகி றது. அவை முற்றாக அகற் றப்பட வேண்டும் என்பது எமது நோக்கம்.

தனியார் வைத்தியசா லைகளும் மக்களுக்கு சேவை வழங்குவதில் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றன.

இலங்கையை பொறுத்த வரையில் 50 வீதமான வெளிநோயாளர் பிரிவுக் குரிய சிகிச்சையை தனியார் வைத்தியசாலைகள்தான் மேற்கொண்டு வருகின்றன. அவ்வப்போது மக்கள் முறைப் பாடுகளை தெரிவித்தாலும், முக்கியமான சேவைகளை அவர்கள் வழங்கி வருகிறார் கள். மிகக் கவனத்துடன் தமது தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும் அதை நிவர்த்தி செய்து பொதுமக்களுக்கு நிறைவான சேவைகளை வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வு







(யாழ்ப்பாணம்)

யாழ்.மீசாலை விக்னே ஸ்வர மகா வித்தியாலய 2017 ஆம் ஆண்டுக்கான மாணவர்பாராளுமன்ற கன்னி அமர்வும் அமைச்சர்கள் பதவியேற்பும் நேற்று முன் தினம் சனிக்கிழமை வித்தி யாலய மண்டபத்தில் ஆரம் பமாகி இடம்பெற்றது.

வித்தியாலய முதல்வ ரும் மாணவர் நாடாளுமன் றச் செயலாளருமான சு.சிவா னந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவ மும், சிறப்பு விருந்தினராக கிராம உத்தியோகத்தர் சு.உலகநாதனும், கௌரவ விருந்தினராக வித்தியாலய பிரான்ஸ் கிளை பழைய மாணவர் சங்க உறுப்பினர் ஐ.செல்வ ராஜாவும் கலந்து சிறப்பித்தனர். (இ-9)



மருதங்கேணி பிரதேச செயலகத்தில் மாற்றுத்திறனாளிகள், முதியோர் மற்றும் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றபோது.. (படங்கள்:தும்பளைச்செய்தியாளர்)




## சர்வதேச நல்லொழுக்க தின விழிப்புணர்வு ஊர்வலம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர் வதேச நல்லொழுக்கதினம் ஒக்டோபர் 03, 2017 இன் தொடர் நிகழ்வாக நடத்தப்ப டும் விழிப்புணர்வு ஊர்வல மும் கூட்டமும் இன்று திங் கட்கிழமை காலை 9 மணி க்கு நிறுவனத்தலைவர் மு.இர வீந்திரன் தலைமையில் இடம்பெறும். (இ-7)

## மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மந்துவில் வரணி, இயற்றாலை மற்றும் கொடிகாமம் பகுதிகளில் பருவ மழை பொழிந்ததால் நெற் பயிர்கள் துளிர்க்க ஆரம்பித் துள்ளதாக விவசாயிகள் மகி ழ்ச்சியடைந்துள்ளனர்.

காலபோக நெற்செய்கை கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னர் ஆரம்பமான நிலை யில் பருவகால மழை பெய் யாததால் விவசாயத்திற்கு தேவையான போதிய நீர் இன் மையால் நெற்பயிர்கள் கரு கியதாகவும் தற்போது பெய்து வரும் மழையால் நெற்பயிர் கள் துளிர்க்க ஆரம்பித்துள்ள தாகவும் விவசாயிகள் தெரி வித்துள்ளனர். (இ-10-10)



குருநகர் ஜே/ 68 மற்றும் ஜே/69 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை செயலமர்வு கடந்த 27 ஆம் திகதி குருநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (படங்கள்: குருநகர் செய்தியாளர்)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் சங்கானைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற "போதைப் பொருள் அற்ற நாடு" என்ற விழிப்புணர்வு வேலைத்திட்டத்தின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண தொழில் முயற்சியாளர் விருது - 2016

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றமும் (**Chamber of Commerce and Industries of Yarlpanam**) கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தேசிய தொழில் முயற்சி அபிவிருத்திஅதிகாரசபையும்(National Enterprise Developement Authority) இணைந்து வருடா வருடம் நடத்தும் வட மாகாண தொழில் முயற்சியாளர் விருதுகளுக்கான 2016-ம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

### நோக்கம்

01. சிறந்ததொழில் முயற்சியாளர்களுக்கான அங்கீகாரமும் கௌரவித்தலும்.
02. தொழில் முயற்சியாளரை மேலும் ஊக்குவித்து வட மாகாண மொத்த உற்பத்தி அதிகரிப்பில் உந்து சக்தி வழங்குதல்.
03. தொழில் முயற்சியாளர்களை அவர்களது துறைகளில் உயர்நிலை அடைவதற்கு ஊக்கப்படுத்தல்.

### விருதுகளுக்கான மாவட்டங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்.

### விருதுகளுக்கான தொழில் முயற்சி பிரிவுகள்

01. உற்பத்தித்துறை
02. விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன் வளங்கள்
03. விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை
04. சேவைத்துறை

### தொழில்முயற்சி வகைகள்

| தன்மை | மொத்த முதலீடு | தொழிலாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| நுண்ணியது | 0.5மில்லியனுக்கும் குறைவானது | 01 - 05 |
| சிறியது | 0.5 மில்லியன் - 10மில்லியன் | 05 - 20 |
| நடுத்தரம் | 10 மில்லியன் - 50 மில்லியன் | 20 - 50 |
| பெரியது | 50 மில்லியனுக்கும் அதிகமானது | 50ற்கும் அதிகமானது |

### வழங்கப்படவுள்ள விருதுகள்

அதிசிறந்த தொழில் முயற்சியாளர் விருது (வட மாகாண ரீதியாக) - 01
சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருதுகள் - 12 (அட்டவணையிலுள்ளவாறாக)

| தொழில்முயற்சி வகை | நுண்ணியது | சிறியது | நடுத்தரம் | பெரியது |
|---|---|---|---|---|
| உற்பத்திதுறை | 01 | 01 | 01 | 01 |
| விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன் வளங்கள் | 01 | 01 | 01 | 01 |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் சேவைத்துறை | 01 | 01 | 01 | 01 |

### விசேட விருதுகள் - 06

சிறப்பாக செயலாற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளன.

- சுற்றுச்சூழலுடன் ஒத்திசைவாக இயங்குகின்ற தொழில் முயற்சி
- சிறந்த ஏற்றுமதியாளர்
- சிறந்த உற்பத்தித் திறனுடன் இயங்கும் தொழில் முயற்சி
- சிறந்த புத்தாக்க தொழில் முயற்சி
- சிறந்த பெறுமதிசேர் உற்பத்தி தொழில் முயற்சி
- சிறந்த சக்தி வளப்பாவனைக்கான தொழில் முயற்சி

### தகைமை

- வட மாகாணத்தினை சார்ந்த பதிவு செய்யப்பட்ட தனியார்துறை தொழில் நிறுவனங்கள் (வட மாகாணத்தில் கிளைகளைக் கொண்டுள்ள தேசிய நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் விண்ணப்பிக்க இயலாது.)
- சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்டிருத்தல் அவசியம். பிரதேச செயலகம் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்.

### விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கும் இடங்கள்

01. யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் - இல. 106, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (தொலைபேசி - 021 222 6609)
02. வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் - சத்தியா கட்டடம், இல.57, முதலாம் குறுக்கு வீதி, வவுனியா. (தொலைபேசி - 024 222 4313)
03. வட மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் உள்ள தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை (NEDA) அலுவலகர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
04. மன்னார் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் - இல. 48, மூர் வீதி, மன்னார். தொலைபேசி 077 394 9598

### விண்ணப்பமுடிவுத் திகதி - 15.11.2017

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய பிரதி ஆவணங்களுடன் மேற் கூறப்பட்ட காரியாலயங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து விருதுகள் தொடர்பாகவும் வெளியக நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும். அவர்களது தீர்மானம் தொடர்பாக எவ்வித கடிதத் தொடர்புகளும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விருது வழங்கும் நிகழ்விற்கு ஆகக்குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்பு வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். விருது வழங்கும் நிகழ்வு எதிர் வரும் கார்த்திகை மாதம் யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம்,**
**இல.106, பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-179)

# வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2018ம் வருடம்

## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

2018ம் வருடத்தில் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### வழங்கல்கள்

1. அலுவலக உபகரணங்கள்/தளபாடங்கள்/உருக்கு வீட்டு உபயோகப் பொருட்கள்/பிளாஸ்டிக் பொருட்கள்
2. காகிதாதிகள் மற்றும் எழுது பொருட்கள்
3. மின்சார உபகரணங்கள் மற்றும் தெருவிளக்கு உபகரணங்கள்
4. கொங்கிறீட் பொருட்கள்/ஹியூம் குழாய்கள/சீமெந்துக் கற்கள்
5. ரயர் வகை/ரியூப் வகை/பற்றி வகை
6. வாகனம், இயந்திரங்களின் உதிரிப் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்
7. கணனிகள் மற்றும் கணனி துணைப்பொருட்கள்
8. புகைப்படப் பிரதி இயந்திரம்/தொலைநகல் இயந்திரம்/ரோணியோ இயந்திரம்/டுப்ளோ இயந்திரம்
9. விளையாட்டு உபகரணங்கள்/விளையாட்டுப் பொருட்கள்
10. சீருடைகள்/காலணிகள்/திரைச்சீலைகள்
11. நூலக நூல்கள்/சஞ்சிகைகள்/புதினப் பத்திரிகைகள்
12. கல்/மணல்/சீமெந்து/கருங்கல்/கண்ணாடி உற்பத்திகள்/அலுமினியவேலைகள்/ இரும்பு உட்பட கட்டடப் பொருட்கள்
13. சரளைக் கற்கள் உட்பட வீதிப் பராமரிப்புக்குரிய பொருட்கள்
14. முன்பள்ளி விளையாட்டு உபகரணங்கள்
15. அறிவித்தல் பலகைகள்/பதாகைகள்/பெனர்/ஸ்டிக்கர்
16. துடைப்பம்/விளக்குமாறு/தும்புத்தடி/தூரிகைகள்/சிறியகால் துடைப்பங்கள்/கழுவும் திரவங்கள்/வாசனை திரவங்கள்
17. மின் பிறப்பாக்கி/புல் வெட்டும் இயந்திரங்கள் /மரம் வெட்டும் இயந்திரங்கள்
18. கன்று வகைகள்/உரங்கள்/மருந்துகள் உட்பட தோட்ட அலங்காரப் பொருட்கள்
19. தார் வழங்குதல்
20. கட்டட நிர்மாணப் பொருட்கள்

### சேவைகள்

1. அனைத்து வகையான அச்சு வேலைகள்
2. அலுவலக தளபாடத் திருத்த வேலைகள்
3. கணனி துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்த வேலைகள் மற்றும் சேவீஸ் செய்தல்
4. காணிஅளத்தல் சேவைகள்
5. சட்டசேவைகள்
6. வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகைக்கு (பெக்கோ இயந்திரம், வீதி அழுத்தும் இயந்திரம்)
7. மரம் வெட்டும் சேவைகள்
8. மோட்டார் வாகனதிருத்த வேலைகள்/ சேர்வீஸ் செய்தல்
9. வாகனங்களுக்கான இருக்கைகளுக்கான மேலுறைகள் தயாரித்தல் மற்றும் குஷன் செய்தல்
10. காற்றுச் சீராக்கி முறைமைகள், மின்சார முறைமைகள் மேம்படுத்தல் மற்றும் திருத்த வேலைகள்
11. வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் (தங்களிடம் உள்ள வாகனத்தை குறித்து அனுப்புக)
12. பதாகைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் வரைதல்/தயாரித்தல்/அச்சடித்தல்
13. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
14. இறப்பர் முத்திரை தயாரித்தல்
15. புகைப்படமெடுத்தல், பிரதியெடுத்தல், சட்டம் இடுதல், புத்தகம் கட்டுதல் போன்ற சேவைகள் மற்றும் காணொலி பதிவு செய்தல் வேலைகள்
16. வெற்றுப் போத்தல்கள்,பழைய இரும்பு,பத்திரிகைகளைக் கொள்வனவு செய்தல்
17. டியூப் ஒட்டுதல், ரயர்களுக்கு திரி வைத்தல், ரயர்களை மீள நிரப்புதல், ரயர்கள் மாற்றுதல் போன்ற சேவைகள்
18. பழைய ரயர், ரியூப் கொள்வனவு செய்தல்

### நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்

| | |
|---|---|
| 1.50,000.00 ரூபா வரை | 500.00 |
| 2.50,000.00 ரூபா முதல் 1,500,000.00 வரை | 1500.00 |
| 3.1,500,000.00 ரூபா முதல் 2,000,000.00 வரை | 2000.00 |
| 4.2,000,000.00ரூபாவுக்கு மேல் | 2500.00 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமோ அறிந்து கொள்ளலாம்.
தொலைபேசி இல: 021 228 5761

### வழங்குநர்களாக பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவ மாதிரி

1. நிறுவனத்தின் பெயர்
2. நிறுவனப் பதிவு இலக்கம்
3. நிறுவனமல்லாத தனி நபராயின் தே.அ.அ.இல.
4. முகவரி
5. நிலையான தொலைபேசி இல.
6. கையடக்க தொலைபேசி இல.
7. தொலை நகல் இல.
8. மின்னஞ்சல் முகவரி
9. இணையத்தள முகவரி
10. வழங்குவதற்கு உத்தேசிக்கும் பொருட்கள்/சேவைகள்
11. குறித்த துறையில் அனுபவம்

மேற்காணும் தகவல்கள் உண்மையானவை என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன் என்பதுடன் இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.

.................. ...........................
திகதி ஒப்பம்

### பொது நிபந்தனைகள்

1. பதிவு செய்து கொள்ளும் அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு அம்சத்தின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குப் பதிவு செய்து கொள்வோர் ஒவ்வொரு அம்சத்துக்கும் தனித்தனியாக 500.00ரூபா கட்டணத்தையும் ஒப்பந்ததாரர் அந்தந்த பெறுமதிக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தையும் செலுத்தவேண்டும்.
2. தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் "செயலாளர்,கரைச்சி பிரதேச சபை" என்னும் பெயருக்கு வரையப்பட்ட காசோலை மூலம் அல்லது காசுக் கட்டளை மூலம் கட்டணம் செலுத்தலாம்.
3. தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ளவழங்குநர்களிடம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலை மனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகை செயற்பாடுகளைக் கையாளும் உரிமை சபையைச் சார்ந்தது.
4. கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் சபை தலைமைக் காரியாலயத்திற்கு கொண்டு வருதற்குரிய போக்குவரத்து தங்களால் மேற்கொள்ள வேண்டும்.
5. இந்தச் சபையினால் வழங்கல் கட்டளை பிறப்பிக்கப்பட்டு உரியகாலத்தில் பொருட்கள், சேவையை வழங்கத் தவறினால் முன்னறிவித்தலின்றி வழங்கல் கட்டளை இரத்து செய்து அடுத்த வழங்குநருக்கு கட்டளை அனுப்பப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.
6. குறித்த காலத்தில் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறும் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்படும்.
7. எல்லா விண்ணப்பங்களும் 2017.12.13ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் செயலாளர் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். '2018 வருடத்திற்கான வழங்குநர் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்தல்' என்று கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

கணேசன் கம்ஸநாதன்
செயலாளர்.
**கரைச்சிப் பிரதேச சபை.**
கிளிநொச்சி.

(C-199)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் நிலையம் அமைத்தல்; அரசியல் பிரதிநிதிகளுக்கிடையில் சந்திப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் மாங்குளம் பகுதியில் இயங்கி வருகின்ற வன்னியின் சுவை உணவகத்தை திறம்பட நடத்திவரும் மாங்குளம் வடக்கு பெண்கள் அமைப்புக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் வன்னியின் சுவை உணவக கட்டடத்தில் அமைப்பின் தலைவி தலைமையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்தியர் சத்தியலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு இவர்களுடைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இவர்கள் ஊடாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் யுத்த பாதிப்புக்குள்ளான குடும்ப உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கக்கூடிய வகையில் புலம்பெயர் உறவுகளில் நிதியுதவியில் சுயதொழில் உற்பத்தி நிலையம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் தீர்மானம் எட்டப்பட்டது

அத்தோடு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவின் ஏற்பாட்டில் இவர்களது வன்னியின் சுவை உணவகத்தை மேம்படுத்தும் நோக்குடன் புலம்பெயர் உறவுகளின் சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்பட்டன. (2-281)

## நிர்வாகத் தெரிவு கூட்டம்

(மல்லாவி)

வவுனியா வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகத் தெரிவு கூட்டம் கடந்த 2017.09.28 அன்று நடைபெறுவதற்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் வவுனியா மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்திற்கு கடிதம் காலதாமதமாக கிடைத்த காரணத்தால் திணைக்கள அதிகாரிகள் சமுகமளிக்காத நிலையில் கூட்டம் பிற்போடப்பட்டது.

எனவே இக்கூட்டம் எதிர்வரும் 2017.11.07 அன்று நடைபெறுவதால் புதிதாக சேர்க்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சங்கத்தில் அங்கத்தவராக இருக்கும் அனைத்து கால்நடை உரிமையாளர்களையும் எதிர்வரும் 2017.11.07 மு.ப 10.00 மணிக்கு தவறாது சமுகம் அளிக்குமாறு கால்நடை உரிமையாளர்கள் கேட்டுள்ளனர். இதனை சம்பந்தப்பட் அதிகாரிகள் கவனத்தில் கொண்டு வந்து இவர்களுக்கும் எழுத்து மூலம் இக்கூட்டத்திற்கு தெரியப்படுத்துமாறு கால்நடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-15)

# கமக்காரர் அமைப்புக்களின் எதிர்கால திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்





(குருமன்காடு)

வவுனியா மாவட்ட கமக்காரர் அமைப்புக்களை வலுப்படுத்தலும், எதிர்காலத் திட்டங்களை இனங் காணலும் எனும் தலைப்பில் கமக்கார அமைப்பின ருக்கான நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் நடை பெற்றது.

வவுனியா கலாசார மண்டபத்தில் வவுனியா மாவட்ட கமக்காரர் ஒழுங்கமைப்பு அதிகாரசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கமக்கார அமைப்புக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார், விவசாய விரிவாக்கத்தின் உதவி ஆணையாளர் மற்றும் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# ஒலிபெருக்கி சாதனங்கள் கையளிப்பு



வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரனின் வடக்கு மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாலிநகர் கிராமத்தில் உள்ள மு/குமாரசாமி ஆரம்ப வித்தியாலய மாணவர்களின் பயன்பாட்டுக்கு உதவும் வகையில் ஒலி பெருக்கி சாதனங்களை வழங்கி வைத்துள்ளார்.

இந் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, ஒலி பெருக்கி சாதனங்களின் தொகுதியை மாந்தைக் கிழக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் எஸ். சத்தியசீலன் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரிடம் கையளித்துள்ளார். (2-15)





# கிராம அலுவலர்களுக்கான அலுவலகங்கள் 30 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும்

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு



(மல்லாவி)

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நடப்பாண்டுக்குரிய நிதி 30 இலட்சம் ரூபா செலவில் தலா 15 இலட்சம் ரூபா வீதம் 2 இடங்களில் கிராம அலுவலர்களுக்கான அலுவலகங்கள் அமைக்கப்படும் என துணுக்காய் பிரதேச செயலாளர் இ. பிரதாபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக துணுக்காய் கிராம அலுவலகத்திற்கான அலுவலகம் அமைக்கப்பட்ட உள்ளது.

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வல்லிபுரம் கமலேஸ்வரன் வழங்கிய 15 ஏக்கர் காணியில் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர், உட்பட ஏனைய உத்தியோகத்தர்களின் பயன் பாட்டுக்கான அலுவலம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த 27ஆம் திகதி 9. 30 மணியளவில் நடைபெற்ற போது, வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர்வ. கமலேஸ்வரன் மற் றும் துணுக்காய் பிரதேச செயலாளர் இ. பிரதாபன் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைத்துள்ளனர்.

மற்றைய கிராம அலுவலர் அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் அணிஞ்சியன்குளம் கிராமத்தில் மிக விரைவில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# வாக்குறுதி வழங்கப்பட்டும் வீட்டுத்திட்டம் கிடைக்கவில்லை

## கற்குளம் கிராம மக்கள் கவலை



(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆசிக்குளம் கிராமசேவகர் பிரிவு கற்குளம் படிவம் 1 கிராமத்தை சேர்ந்த மக்கள் யுத்த காலத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்ட நிலையில் 2007 ஆம் ஆண்டு கற்குளம் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனத்தினால் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்ட நிலையில் கடந்த பத்து வருடங்களாக அவ் வீடுகளிலேயே மக்கள் வசித்து வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் விசேட தேவைக் குட்பட்டவர்களும் வசித்து வருவதுடன் பல குடும்பங்கள் மலசலகூட வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமி நாதன் கற்குளம் கிராமத்தை பார்வையிட்டு நிரந்தர வீட்டுத் திட்டத்தை வழங்குவதாக வாக்குறுதி வழங்கியுள்ளதாகவும் கிராம மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

கற்குளம் படிவம் 1 கிராமத்தில் உப குடும்பங்களுடன் 93 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அடுத்து மழை காலம் நெருங்கி வருவதால் வெள்ளத்தில் தங்கள் வீடுகள் தாக்குப் பிடிக்காது என்றும் தாங்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்க வேண்டிய நிலைமை ஏற்படும் என கவலை வெளியிட்டனர். (2-250)

# மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்



(குருமன்காடு)

சுவிஸ் நாட்டை மையமாகக் கொண்டு செயற்படும் எழுகை அமைப்பின் நிதி அனுசரணையில் எழுகை இலங்கை கிளையினரால் வவுனியா மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் பிரதேச செயலாளரால் வழங்கி வைக்கப்பட்டன.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களான வவுனியா அம்மிவைத்தான், மருதோடை, நாவற்குளம் மற்றும் கண்டியை சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கே இத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா ஊடகவியலாளர்கள் சிலரினால் ஒழுங்கமைக்கப்பட்ட இந் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்திருந்தார். (2-250)

# மகா கும்பாபிஷேகம்

வவுனியா 2 ஆம் குறுக்கு வீதியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் கோவில் மகா கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகும்.

[illegible] கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தல் நடைபெறும்.

மறுநாள் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.20 மணிவரையுள்ள சுப வேளை [illegible] கும்பாபிஷேகம் [illegible] (2)

# வீதிகளை புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் பகுதியில் புனரமைக்கப்படாது இருக்கின்ற வீதிகளை புனரமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் 816 குடும்பங்களைச் சேர்ந்த 2607 பேர் வரையில் வாழ்ந்து வருகின்றனர்.

இந் நிலையில் ஸ்கந்தபுரம் பகுதியில் உள்ள குடியிருப்பு வீதிகள் பிரதான வீதிகள் எவையும் இதுவரை புனரமைக்கபடாது இருக்கின்றன.

இதேவேளை சில வீதி கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

எனவே முக்கியமான வீதிகளைப் புனரமைத்துத் தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் அலை தாக்கியதால் படகு கவிழ்ந்து மீனவர் உயிரிழந்தார்

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சுண்டிக்குளம் பெருங்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் களின் படகு மீது கடலில் எழுந்த பேரலை தாக்கியதன் காரணமாக படகு கவிழ்ந்து விபத்துக் குள்ளான நிலையில் 5 மீனவர்கள் நீந்திக் கரை சேர்ந்த நிலையில் ஒரு மீனவர் காணாமல் போன நிலையில் பலத்த தேடு தலின் பின்னர் மயங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக மீனவரைப் பரிசோதனை செய்த வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சுண்டிக்குளம் பெருங்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகு மீது நள்ளிரவு நேரத்தில் பெருங் கடலலை தாக்கியதன் காரணமாக படகு கடலில் மூழ் கிய போது, மீன் பிடித்துக் கொண்டிருந்த 6 மீனவர்களும் கடலில் மூழ்கியுள்ளனர். இதன் போது 5 மீனவர்கள் பலத்த சிரமத் தின் மத்தியில் நேற்று முன்தினம் சனிக் கிழமை அதிகாலை அண்மித்த நேரத்தில் நீந்திக் கரை சேர்ந்த நிலையில் ஒருவர் மட்டும் கரை திரும்பவில்லை.

இந்த மீனவரைத் தேடி சுண்டிக்குளப் பகுதி மீனவர்கள் படகுகள் மூலம் பலத்த தேடு தலை மேற்கொண்ட போது நேற்று ஞாயி ற்றுக்கிழமை அதிகாலை சுண்டிக்குளப் பகுதி ஆழ்கடலில் மயங்கிய நிலையில் மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போது, மீனவரைப் பரிசோதனை செய்த வைத்தி யர்கள் மீனவர் ஏற்கனவே உயிரிழந்துள் ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த கடல் அனர்த்தம் காரணமாக கல் லாறுக் கிராமத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராமையா - சந்திரமோகன் (வயது - 40) என்ற குடும் பஸ்தரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)




# 141 குடும்பங்களுக்கு மாங்கன்றுகள் வழங்கல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட அம்பாள்புரம் கிராம சேவையாளர் பிரிவு மக்கள் மற்றும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தென்னியன்குளம், உயிலங் குளம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 141 குடும்பங்களுக்கு தலா 25 மாங்கன்றுகள் வீதம் இத்திட்டத்தினூடாக மாங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனுடைய ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை அம்பாள்புரம் கிராமத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் றோகன கமகே கலந்துகொண்டு மாங்கன்றுகளை வழங்கி வைத்தார். (2-281)

## இளைஞர், யுவதிகளுக்கு தெளிவூட்டும்

# போதைப்பொருள் விழிப்புணர்வு செயலமர்வு ஒட்டுசுட்டானில் நேற்று முன்னெடுக்கப்பட்டது





(பனிக்கன்குளம்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொரு ளாதார நடவடிக்கை அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது நாடளாவிய ரீதியில் NO DRUGS நாம் YOUTH எனும் தொனிப் பொருளில் போதைப்பொருள் விழிப்புணர்வு செயலமர்வை நடத்தி அதனூடாக கிராம ங்கள் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத் தும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறை ப்படுத்தி வருகிறது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட த்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத் திறகுட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தெளி வூட்டும் வேலைத்திட்டமொன்று நேற்றுக் காலை எட்டு முப்பது மணிமுதல் நண்பகல் பன்னிரண்டு மணிவரை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி செ.சுஜிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் செல்வி ஆர்.ராஜமல்லிகை, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி சறோஜா குகநேசதாசன்,மாந்தை கிழக்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அ.ஜெயாளன், துணுக்காய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜெ.சுகந்தன் , விரிவுரையாளர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் எனப் பலரும் கலந்துகொணடிருந்தனர். (2-281)

# கனகாம்பிகைக்குளத்தின் புல்கற்றைகளை பெறுவதற்கு பண்ணையாளர்கள் எதிர்ப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தினை மேய்ச்சல் தரவையாக பயன்படுத்தும் கால் நடை பண்ணையாளர்கள் புல் வெட்டி ஏற்று வதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் இரணைமடு குளத் தின் அபிவிருத்தி பணிகளிற்காக புல் வெட்டி ஏற்றப்படுவதற்கே குறித்த பண்ணையாளர் கள் அண்மையில் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இரணைமடுக்குளத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலை யில் குளக்கட்டின் அபிவிருத்திக்காக புற்கள் அணையின் பாதுகாப்பிற்காக பயன் படுத்த ப்படுகின்றது. இதற்கான புல்கற்றைகளை பெற்றுக்கொள்வதற்கு சில பகுதிகள் அடை யாளம் காட்டப்பட்டிருந்தன. இந்நிலையில் கனகாம்பிகைகுளத்தில் புல்கற்றைகள் பெற்றுக்கொள்வதற்கு சென்றிருந்த ஒப்பந்த காரர்களிற்கு பண்ணையாளர்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தமது கால்நடை வளர்ப்பிற்கு பொருத்த மான பகுதிகளை அடையாளப்படுத்தி தருமா றும், குறித்த குளத்தினை 7 கிராமங்களை சேர்ந்த பண்ணையாளர்கள் பயன்படுத்தி வருவதாகவும் பொருத்தமான மேய்ச்சல் தரை இல்லாமையால் தாம் பெரும் சிரம ங்களை எதிர் கொள்ளவதாகவும் பண்ணை யாளர்கள் தெரிவிக்கின்றனர்.(2-315-312)

# அறநெறிப் பாடசாலை திறந்து வைப்பு

(பனிக்கன்குளம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணை க்களத்தின் அனுசரணையுடன் தெய்வீக கிராம நிகழ்வு ஒன்று நேற்றுக் காலை முள்ளியவளை பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் பிரதம விருந்தினராக இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் உமாமகேஸ் வரன் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

நிகழ்வில் கல்யாண வேலவர் அறநெறி பாடசாலை திறப்பு நிகழ்வு வைபவரீதியில் நடைபெற்றுள்ளது.

முதலில் கல்யாண வேலவர் ஆலயத்தில் படம்வைத்து பூசைசெய்த பின்னர் மரக் கன்று ஒன்று நாட்டிவைக்கப்பட்டுள்ளது. கோமாதபூசை இடம்பெற்று பின்னர் கல் யாண வேலவர் ஆலய நிர்வாகி மார்க்கண்டு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அறநெறி பாடசாலை கட்டடத்தினை இந்து



கலாசார திணைக்கள் பணிப்பாளர் உமா மகேஸ்வரன் திறந்துவைத்துள்ளதுடன் கட்டடத்தின் பெயரினையும் திரைநீக்கம் செய்துவைத்துள்ளார்.

நிகழ்வில் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டது.(2-281)

# இலவச கணனி கற்கை நெறியகத் திறப்பு விழா

(பனிக்கன்குளம்)

சர்வதேச கல்வி அமைப்பின் ஏற்பாட்டில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் அனு சரணையுடன் இலவச கணனி கற்கை நெறியகம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு தொட்டியடி வீதி விசுவமடுவில் (உப தபாலகம் முன்பாக) திறந்து வைக்கப் படும்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தலைமையில் நடைபெ றும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். விநோநோதராதலிங்கம், கௌரவ விருந்தி னராக சுவிஸ் சி.விமல்டொரஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.(2-281)







வற்றாநதி மக்கள் நலனோன்பு அமைப்பின் ஏற்பாட்டில் வற்றாப்பளை பிரதேசத்திற்குட்பட்ட பகுதி முதியோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் வற்றாநதி அமை ப்பின் தலைவர் க.விமலதாஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியகலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டு சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து முதியோர்களுக்கான சிறு விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்று பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்கேள்வி அறிவித்தல்-2018

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2018.01.01 – 2018.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள்கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரம் | கேள்வி திறக்கப்படும் திகதியும், நேரமும். |
|---|---|---|
| திகதி : 2017.10.30 ஆம் திகதி முதல் 2017.11.13 ஆம் திகதி வரை, அலுவலக நாட்களில் மட்டும் | திகதி : 2017.11.14 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை | திகதி : 2017.11.14 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை |
| நேரம் : மு.ப.8.30 – பி.ப.3.00 | நேரம் : மு.ப.10.00 மணி | நேரம் : மு.ப.11.00 மணி |
| இடம்:கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம் | | இடம்: கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு 2017.11.14 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படவேண்டும்.

இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2017.11.14 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT நீங்கலாக, மீளளிக்கப்பட முடியாதது) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **சேவைச் சந்தை- கிளிநொச்சி.** | | | |
| 01 | தராசுக்கொட்டகை – மீன் | 30,000.00 | 1,000.00 | 2,477,128.50 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 30,000.00 | 1,000.00 | 2,376,297.00 |
| 03 | இல.01. கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,715,769.00 |
| 04 | இல.02. கோழியிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,390,950.00 |
| 05 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 197,986.70 |
| 06 | துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 30,000.00 | 1,000.00 | 2,673,000.00 |
| 07 | பொது மலசலகூடம் | 10,000.00 | 1,000.00 | 450,000.00 |
| | **கிளிநகர்ப் பகுதி** | | | |
| 01 | கரடிப்போக்கு சந்தியிலிருந்து டிப்போ சந்தி வரையான A.09 வீதி வாகனத் தரிப்பிடம் (முச்சக்கரவண்டி தரிப்பிடத்தை தவிர்த்து) | 10,000.00 | 1,000.00 | 450,000.00 |
| | **பொதுச் சந்தை - பரந்தன்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 248,935.81 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | 1,390,950.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 241,164.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 98,208.00 |
| | **பொதுச்சந்தை – வட்டக்கச்சி** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை (வட்டக்கச்சி) | 10,000.00 | 1,000.00 | 512,028.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 295,020.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை (இராமநாதபுரம்) | 10,000.00 | 1,000.00 | 90,000.00 |
| | **பொதுச்சந்தை – இரணைமடு** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 248,935.81 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 30,000.00 | 10,000.00 | [illegible] |
| 03 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 10,000.00 | 50[illegible] |
| | **பொதுச்சந்தை – உருத்திரபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 71,124.51 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 378,180.00 |
| 03 | கோழியிறைச்சிக்கடை (D.10) | 10,000.00 | 1,000.00 | 121,275.00 |
| | **பொதுச்சந்தை – ஸ்கந்தபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 | 307,889.99 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 321,849.00 |
| | **பொதுச்சந்தை – தருமபுரம்** | | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 | 221,801.81 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 464,310.00 |
| | **கல்லாறு** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 108,900.00 |
| | **ஜெயந்திநகர்** | | | |
| 01 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 150,480.00 |
| | **ஆனைவிழுந்தான்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 215,622.00 |
| | **கண்டாவளை** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 99,000.00 |
| | **முரசுமோட்டை** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 238,689.00 |
| | **அக்கராயன்** | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 297,000.00 |

நிபந்தனைகள்.

1.உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

2.கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.

3.கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப் பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

4.கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியினை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப்பிரதி என சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5.கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.

6.சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதித்தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விதாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடத்தினால் குறித்த வைப்புத்தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகைப் பணமாக மாற்றம் செய்யப்படும்.

7.இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படல் வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

8.மாதாந்த குத்தகை கட்டணங்களை அம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவது கட்டாயமானதாகும். அக் கட்டணங்களில் எவற்றையாவது குறித்த கால எல்லைக்குள் கட்டத்தவறி அதன்பின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

9.தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைக் கட்டணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.

10.இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

11.துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 5.00 உம்,மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 10.00 உம், முச்சக்கரவண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 20.00 உம், கனரக வாகனங்களக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிட முடியும்.

12.அனைத்து தராசுக்கொட்டகைகளுக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது தற்போது பாவனையிலுள்ளவாறு 3% வரியினையே அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ, குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

13.கிளிநகர்ப்பகுதி வாகனத்தரிப்பிடக் கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் (அதி விஷேசமானது) பகுதி 2 இன் - பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத் துணைவிதிகளுக்கு கட்டுப்படும்.

14.ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களினதும், கேள்விப் பத்திரத்தை சபைக்கு சமர்ப்பிக்காதவர்களினதும் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

15.இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட குத்தகைதாரர் சபையுடன் செய்துகொள்ளும் குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டிய பொறுப்புடையவராகிறார்.

கணேசன் கம்ஸநாதன்.
செயலாளரும் கேள்விச் சபைத் தலைவரும்,
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

(61-198)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இயங்கும் சித்திரவதை முகாம்கள்!

## ஐ.நாவுக்கு யஸ்மின் சூக்கா அறிக்கை



(கொழும்பு)

**இலங்கையில் சித்திரவதை முகாம்கள் தொடர்ந்தும் இயங்குவதாக ஐ.நாவின் முன்னாள் நிபுணர் யஸ்மின் சூக்கா அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் உண்மை மற்றும் நேர்மைக்கான சபையிடம் அவர் இந்த அறிக்கையைக் கையளித்துள்ளார்.**

சித்திரவதை முகாம்களில் துன்புறுத்தல்களுக்கு உள்ளான சுமார் பத்து விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு பல்வேறு நாடுகளில் யஸ்மின் சூக்கா அரசியல் தஞ்சம் பெற்றுக் கொடுத்துள்ளார். அத்துடன் அவர் இலங்கைக்கு எதிராக இதுவரை சுமார் 25 அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு அமைப்புகளுக்கு சமர்ப்பித்துள்ளார்.

வேறு எந்தவொரு நாட்டுக்கு எதிராகவும் அவர் இந்தளவு அறிக்கைகளை சமர்ப்பித்ததில்லை என்றும் சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## ICTA நிறுவனத்தின் கோரிக்கையை நிராகரித்தது ஆட்பதிவு திணைக்களம்

(கொழும்பு)

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவர் (ICTA ) நிறுவனத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஆட்பதிவு திணைக்களம் நிராகரித்துள்ளது. ஆட்பதிவு திணைக்களத்தினால் பேணப்பட்டு வரும் தகவல்களை பரிமாறிக்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனமான இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவர் நிறுவனம் கோரியுள்ளது.

எனினும், தம்மிடம் காணப்படும் பொதுமக்களின் தகவல்களை பரிமாறிக்கொள்ள முடியாது என அறிவித்துள்ள ஆட்பதிவு் திணைக்களம் இவ்வாறு தகவல்களை பரிமாறுவது நபர்களின் தனிப்பட்ட விடயங்களைப் பாதிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் உட்கட்டுமான வசதிகள் அமைச்சினால் இது தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரம், அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட போது நிராகரிக்கப்பட்டுள்ளது. போதியளவு தகவல்கள் வழங்கப்படவில்லை என்ற அடிப்படையில் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.


நபர்களின் விபரங்கள் உள்ளிட்ட அட்டைகளை அச்சிடுவதற்கு இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவர் நிறுவனம் உத்தேசித்துள்ள நிலையில் இதற்கென டிஜிட்டல் உட்கட்டுமான அமைச்சு 8 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.

எனினும், இவ்வாறு ஆட்பதிவுத் திணைக்களம் வசம் உள்ள தகவல்களை வழங்குவது நபர்களின் அந்தரங்கத் தன்மை குறித்த உரிமையை பாரியளவில் மீறுவதாக அமையும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், திருத்தங்களுடன் மீளவும் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படக் கூடிய சாத்தியம் உண்டு என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## இரு இனங்களுக்கிடையே வாக்குவாதம் கிரானில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிப்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, கிரான் பகுதியில் இரண்டு சமூகங்களுக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் பதற்றம் நிலவி வருகிறது.

கிரான் பொதுச் சந்தைப் பகுதியில், "இங்கே முஸ்லிம்கள் வியாபாரம் செய்யத் தடை" என்ற பதாகை ஒன்று மின்சாரத் தூணில் பொருத்தப்பட்டிருப்பதையடுத்தே இந்த முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கலகம் அடக்கும் பொலிஸார் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே வாழைச்சேனையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பில் இரண்டு சமூகத்தினரிடையேயும் கடும் வாக்குவாதம் நிலவியிருந்த நிலையிலேயே இந்த பதாகை மாட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


**இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>தகைமை/தொழில்:A/L பிரான்ஸ்<br>தொ.இ: B/7171 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 32 செவ் 2இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6058 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: புரட்டாதி<br>கி.பா: செ. 1இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/கமம்<br>தொ.இ: B/7173 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc, MSc, MBA, ACCA லண்டன்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6062 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BBA/கனடா<br>தொ.இ: B/7176 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 19 செவ் 1இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6068 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 28 செவ் 2இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:B.COM, HNDA/ அரச தொழில்<br>தொ.இ: B/7177 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 38 செவ் 4இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Diploma<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6071 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஆந்திர பொலிஸ் அதிகாரி வீட்டில் இலஞ்ச ஒழிப்புத்துறை திடீர் சோதனை

### ரூ.24 கோடி சொத்துக்கள் கண்டுபிடிப்பு



(திருமலை)

ஆந்திர மாநில சிஐடி பிரிவு டிஎஸ்பி வீட்டில் இலஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் நடத்திய சோதனையில் ரூ.24 கோடி சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆந்திராவின், அமராவதியில் சிஐடி டிஎஸ்பியாக பணிபுரிந்து வருபவர் அரிநாத்ரெட்டி.

இவர், வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்து வைத்துள்ளதாக வந்த தகவலையடுத்து அவரது சொந்த ஊரான கர்னூல், கடப்பா, அனந்தப்பூர், பெங்களூர் உட்பட 9 இடங்களில் நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் இலஞ்ச ஒழிப்புத்துறையினர் திடீரென சோதனை நடத்தினர்.

இச்சோதனையில் அரிநாத்ரெட்டி ரூ.24 கோடி வரை வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதற்கான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது. அதில் கர்னூலில் 2 அடுக்குமாடி குடியிருப்பு, கடப்பாவில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் விவசாய நிலம், பெங்களூர் உட்பட பல்வேறு பகுதியில் பிளாட், விவசாய நிலங்களாக வாங்கி வைத்துள்ளதாக தெரிகிறது.

தொடர்ந்து இலஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி வருவதால் சோதனை யின் முடிவு விபரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என்று கூறினர்.

அரிநாத் கடப்பாவில் இன்ஸ்பெக்டர் மற்றும் டிஎஸ்பியாகவும், கர்னூல் மாவட்டம், நந்தியாலாவில் டிஎஸ்பியாக பணிபுரிந்து கடந்த 2 மாதத்துக்கு முன்பு தான் சிஐடி டிஎஸ்பியாக பணியிட மாற்றம் செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (8)

## ஆப்கான் துணை ஆளுநர் பாகிஸ்தானில் கடத்தல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு சென்ற ஆப்கானிஸ்தான் நாட்டின் குனார் மாகாண துணை ஆளுநரை பெஷாவர் நகரில் அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் எல்லையோரத்தில் உள்ள பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் ஆப்கானிஸ்தான் நாட்டை சேர்ந்த சிலர் வைத்திய சிகிச்சைக்காகவும் தொழில் நீதியாகவும் வந்து செல்கின்றனர்.

அவ்வகையில், ஆப்கானிஸ்தானில் இருந்து எல்லையை கடந்து தன்னுடன் பெஷாவர் நகருக்கு வந்த, தனது சகோதரரை கடந்த வெள்ளிக்கிழமை சில மர்ம நபர்கள் காரில் கடத்திச் என்று விட்டதாக பொலிஸில் ஒருவர் புகார் அளித்தார்.

புகார் தொடர்பான தகவல்களை பொலிஸார் சேகரித்த போது ஆப்கானிஸ்தான் நாட்டின் குனார் மாகாண துணை அளுநரான முஹம்மது நபி அஹ்மதி என்பவர் கடத்தப்பட்ட விபரம் பின்னர் தெரியவந்தது.

வைத்திய விடுப்பில் இருந்த தங்கள் நாட்டின் துணை ஆளுநர் பாகிஸ்தானில் கடத் தப்பட்ட தகவலை ஆப்கானிஸ்தான் அரசும் உறுதிப்படுத்தியுள்ளது.

குனார் மாகாண துணை ஆளுநர் முன்னறிவிப்பு ஏதுமின்றி பாகிஸ்தானுக்கு வந்துள்ளார். முறையாக அறிவித்திருந்தால் அவருக்கு உரிய பாதுகாப்பை அளித்திருப்போம் என தெரிவித்துள்ள பெஷாவர் நகர பொலிஸார் அவரை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கடத்தலுக்கும் தங்களது இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, முன் விரோதம் அல்லது தனிப்பட்ட விவகாரங்களால் முஹம்மது நபி அஹ்மதி கடத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (8)

## பயங்கரவா…
## வேறு வழிக…
## பாகிஸ்தானு…

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் செயற்பட்டு வருகிற பயங்கரவாத குழுக்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஹெதர் நவார்ட் இந்திய செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது, "பாகிஸ்தானில் செயற்பட்டு வருகிற பயங்கரவாத குழுக்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும், பாகிஸ்தான் மண்ணில் உள்ள அவர்களின் மறைவிடங்களை நிர்மூலமாக்க வேண்டும் என வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன்

#### குஜராத் அரச வைத்தியசாலையில் சோகம்

## ஒரே நாளில் ஒன்பது குழந்தைகள் மரணம்



(காந்திநகர்)

குஜராத் மாநிலம் அகமதாபாத் மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலையில் ஒரே நாளில் 9 குழந்தைகள் மரணமடைந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலத்தில் உள்ள அரச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 9 பச்சிளங் குழந்தைகள் உயிரிழந்தன. அதில் ஐந்து குழந்தைகள் உடல்நலக்குறைவு காரணமாக அவ்வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர் எனவும், மேலும் அவ்வைத்தியசாலையில் பிறந்த நான்கு குழந்தைகள் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணமடைந்தனர் எனவும் வைத்தியசாலை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இருப்பினும் ஒரே நாளில் 9 குழந்தை கள் மரண மடைந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (8)

## தொழில் நகரத்தில் தீ விபத்து
### 400 இரு சக்கர வாகனங்கள் நாசம்

(போபால்)

மத்தியப்பிரதேசம் மாநிலத்தின் முக்கிய தொழில் நகரமான இந்தூரில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 400 இருசக்கர வாகனங்கள் எரிந்து நாசமடைந்தன.

மத்தியப்பிரதேசம் மாநிலத்தின் முக்கிய தொழில் நகரமான இந்தூரில் உள்ள அக்ராசென் சவுராஹா பகுதியில் பழைய இருசக்கர வாகனங்களை வாங்கி, விற்பனை செய்யும் சில கடைகள் இயங்கி வருகின்றன. நேற்று அதிகாலை இங்குள்ள ஒரு கடையில் திடீரென்று தீ பிடித்தது. அந்த கடையில் இருந்த வாகனங்களை பதம்பார்த்த தீ, விரைவாக அருகாமையில் உள்ள கடைகளுக்கும் பரவியது.

தகவல் அறிந்து நான்கு வாகனங்களில் விரைந்து வந்த தீயணைப்பு படையினர் சில மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் மூன்று கடைகளில் இருந்த சுமார் 400 இருசக்கர வர்கனங்கள் நாசம் அடைந்ததாகவும், பல வாகனங்கள் தொடர்பான பதிவு சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்கள் சாம்பல் ஆனதாகவும் கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். (8)

## இந்தியாவ…
## ஆளில்லா …
### பாகிஸ்தா…



(இஸ்லாமபாத்)

இந்தியாவுக்கு அமெரிக்கா ஆயுதம் தாங்கி ஆளில்லா விமானங்களை விநியோகம் செய்ய ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்துக்கு பாகிஸ்தான் தனது ஆட்சேபத்தை பதிவு செய்துள்ளது.

இந்தியாவுக்கு அமெரிக்கா ஆயுதம் தாங்கி ஆளில்லா விமானங்களை விநியோகம் செய்ய உள்ளது. இதற்காக 2 பில்லியன் டொலர் (சுமார் ரூ.13 ஆயிரம் கோடி) மதிப்பிலான ஒப்பந்தத்தை நிறைவேற்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளார். இது பாகிஸ்தானுக்கு எரிச்சலை ஏற்படுத்தி

## இராணுவத்தினருடன் தீபாவளி கொண்டாடியது மறக்க முடியாத அனுபவம் - பிரதமர் மோடி



(பெங்களூர்)

காஷ்மீரில் இராணுவ வீரர்களுடன் தீபாவளி கொண்டாடியது மறக்க முடியாத நிகழ்வு என மன்கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வானொலி மூலம் உரையாற்றுவார். இந்நிலையில் நேற்று பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவர் பேசினார். குறிப்பாக காஷ்மீரில் இந்தாண்டு தீபாவளியை இராணுவ வீரர்களுடன் கொண்டாடியது மறக்க முடியாத அனுபவத்தை தந்தது எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் பேசியதாவது.

ஐ.நா. அமைதிப்படையில் சுமார் 18 ஆயிரம் இந்திய வீரர்கள் பணியாற்றுகின்றனர். இன்னும் 7 ஆயிரம் வீரர்கள் புதிதாக இணைய இருக்கின்றனர். இது உலகின் மூன்றாவது இராணுவ பங்களிப்பாகும். நம் வீரர்களின் கதைகளை பற்றி நாம் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும்.

நவம்பர் 14 ஆம் திகதி குழந்தைகள் தினம் கொண்டாடப்பட இருக்கிறது. அதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். புதிய இந்தியாவின் தலைவர்களாக குழந்தைகள் இருப்பார்கள்.

இந்தியா உலகிற்கு அமைதி, சமாதானம் மற்றும் சகோதரத்துவத்தை அளித்து வருகிறது. ஐ.நா.மனிதவுரிமைகளின் பாலின சமத்துவத்திற்கான அறிவிப்பு இந்தியாவின் உந்துதலுக்கு ஒரு சாட்சியாகும். சுமார் 10 ஆண்டுகளுக்கு பின் இந்திய ஹொக்கி அணி ஆசிய கோப்பையை கைப்பற்றியுள்ளதற்கு வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்கிறேன்.

டென்மார்க் ஓபன் பட்மிண்டன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றுள்ள ஸ்ரீகாந்துக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

இளம் கால் பந்து வீரர்கள் நம் மனதை வென்று விட்டனர். இந்தியா வில் கால் பந்துக்கு சிறந்த எதிர் காலம் உள்ளது என்றார். (8)

## உலகின் முதல்…

(சான்பிரான்சிஸ்கோ)

அமேசான் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான ஜெஃப் பெசோஸ் இரண்டாவது முறையாக உலகின் முதல் பணக்காரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

நீண்ட காலமாக உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த மைக்ரோசொப்ட் நிறுவனர் பில் கேட்ஸ்-ஐ பின்னுக்கு தள்ளிய ஜெஃப் பெசோஸ் இரண்டாவது முறையாக உலகின் முதல் பணக்காரர் என்ற அந்தஸ்தை பெற்றுள்ளார்.


போர்ப்ஸ் வெளியிட்ட உலக பணக்காரர்கள் பட்டியலில் பெசோஸ் முதலிடம் பிடித்துள்ளார். அமேசான் நிறுவன பங்குகள் 8 சதவிகிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...வாதிகளை ஒடுக்காவிட்டால் ...கிகளை பார்த்துக்கொள்வோம்

### ...னுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



தெரிவித்துள்ளார். எங்களின் எதிர்பார்ப்புகளை பாகிஸ்தானிடம் பல முறை சொல்லி விட்டோம். தங்கள் எல்லைக்குள் உள்ள பயங்கரவாத குழுக்கள் மீது அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறினார்.

சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் நிருபர்களை சந்தித்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன், "என்ன செய்ய வேண்டும் என்பதை பாகிஸ்தானிடம்கூறிவிட்டோம். நீங்கள் இதை செய்யுங்கள் என்று கூறி இருக்கிறோம். நீங்கள் ஒரு இறையாண்மை நாடு. என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்யுங்கள்.

என்ன தேவை என்று நாங்கள் நினைக்கிறோம் என்பதை புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அதை செய்ய விரும்பவில்லை என்றால், நாங்கள் எங்கள் வியூகங்களை மாற்றிக் கொள்கிறோம். எங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வேறு வழிகளை பார்த்துக் கொள்கிறோம்" என்று கூறினார்.

சமீபத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவான கருத்தை ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்ட நிலையில் இப்போது வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் கூறியுள்ள கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது. (8)

## ...வுடன் அமெரிக்கா ... விமான ஒப்பந்தம்

### ...ான் கடும் எதிர்ப்பு



...யுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்கு தனது ஆட்சேபத்தை பதிவு செய்துள்ளது.

இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவு செய்தி தொடர்பாளர் நபீஸ் ஜக்காரியா கூறுகையில், "தெற்காசியாவின் போர்த்திறம் சார்ந்த நிலைத்தன்மையை பலவீனப்படுத்தக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளில் கூடுதல் பிராந்திய சக்திகள் கவனமாக இருக்க வேண்டும். ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானங்களை பயன்படுத்துவது மோதலுக்கான வாய்ப்பின்மையை குறைக்கலாம். ஏனெனில் இது இராணு வத்தின் தவறான செயல்களை ஊக்குவிக்கலாம்" என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

"ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானங்கள் விநியோகம் செய்வது, ஏவுகணை தொழில் நுட்ப கட்டுப்பாட்டு அமைப்பு (எம்.டி.சி.ஆர்.) உள்ளிட்ட ஏற்றுமதி கட் டுப்பாட்டு ஆணையங்களின் வழிகாட்டுதல்கள் படிதான் நடைபெறுகிறதா என்பது கண்காணிக்கப்பட வேண்டும்" என்றும் கூறினார். (8)

## சோமாலிய உணவகம் மீது தற்கொலைப்படை தாக்குதல்

### 18 பேர் பலி



(மொகாடிஷு)

சோமாலியா நாட்டின் தலைநகர்மொகாடிஷு அருகே உணவகம் மீது தீவிரவாதிகள் நடத்திய கார் குண்டு மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற உள்நாட்டு தீவிரவாதிகளான அல் ஷபாப் குழுக்கள் ஏராளமாக இயங்கி வருகின்றன.

சோமாலியா அரசை கவிழ்த்துவிட்டு மிகவும் கண்டிப்பு நிறைந்த இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலான ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கமாக உள்ளது.

உள்நாட்டு இராணுவ வீரர்கள் மீது அவ்வப்போது அதிரடியாக தாக்குதல் நடத்தி வரும் இந்த தீவிரவாதிகள் மத்திய ஆபிரிக்காவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுவரும் பன்னாட்டு அமைதிப் படையினரையும் கொன்று குவிக்கின்றனர்.

இந்நிலையில், சோமாலியா நாட்டின் தலைநகர் மொகாடிஷு நகரில் உள்ள ஒரு பிரபல உணவகம் மீது நேற்று அல் ஷபாப் தீவிரவாதிகள் இரண்டு கார் குண்டுகளால் தாக்குதல் நடத்தினர்.

பின்னர், மேலும் பல தீவிரவாதிகள் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கிகளால் சுட்டனர். இந்த மோதலில் 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 30 பேர் படுகாயம் அடைந்தனர். இதனால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அந்த உணவகத்தில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச்சண்டை நடந்து வருகிறது. இந்த சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (8)

## காட்டலோனியாவில் மறுதேர்தல்

### ஸ்பெயினின் அதிரடி முடிவு

(மாட்ரிட்)

ஸ்பெயினில் இருந்து தனிநாடாக பிரிந்து விட்டதாக அறிவித்த காட்டலோனியா பாராளுமன்றத்தை கலைத்துள்ள ஸ்பெயின் அரசு தற்போது அங்கு மறுதேர்தல் நடத்த முடிவெடுத்துள்ளது.

ஸ்பெயினின் தன்னாட்சி பெற்ற மாகாணமான காட்டலோனியா தனிநாடாக பிரிவது குறித்து வாக்கெடுப்பு நடத்தியிருந்தது. அதற்கு 90 சதவிகித மக்கள் ஆதரவாக வாக்களித்திருந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை தனிநாடு பிரகடனம் செய்தது. ஸ்பெயினில் இருந்து பிரிந்து சுதந்திர காட்டாலோனியா பிறந்து விட்டதாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

தனிநாடு பிரகடனம் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே காட்டலோனியா பாராளுமன்றம் கலைக்கப்படுவதாக ஸ்பெயின் அறிவித்தது. மேலும், காட்டலோனியா நிர்வாகம் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படுவதாகவும் ஸ்பெயின் அரசு அறிவித்தது.

இந்நிலையில், டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி கலைக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடத்த ஸ்பெயின் முடிவெடுத்துள்ளது.

இந்த தேர்தலில் காட்டலோனியா தலைவர் பூச்சிய மோண்ட் போட்டியிட வேண்டும் என ஸ்பெயின் விருப்பம் தெரி வித்துள்ளது. ஆனால், இத் தேர்தலை தனிநாடு ஆதரவாளர்கள் புறக்கணிக்க இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (8)




## பேருந்து ஆற்றில் கவிழ்ந்து விபத்து

### 31 பேர் பலி



(காத்மண்டு)

நேபாளத்தில் காத்மாண்டு நகரில் ஓடும் திரிசூல் ஆற் றில் பயணிகள் சென்ற பேரு ந்து கவிழ்ந்த விபத்துக்குள்ளானதில் 31 பேர் பலியாகியுள்ளனர்.

நேபாள தலைநகர் காத்மண்டுவில் இருந்து ராஜ்பிராஜ் நோக்கி பயணிகள் பேருந்து ஒன்று நேற்று முன்தினம் காலை சென்று கொண்டிருந்தது. அதில் 50க்கு மேற்பட்டோர் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அந்த பேருந்து டாடிங் மாவட்டத்தின் கட்பேசி கஞ்சேமோடு பகுதியில் வந்து கொண்டிருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் அங்கு ஓடிக் கொண்டிருந்த திரிசூல் ஆற்றில் கவிழ்ந்து விழுந்தது.

இதனால் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் தங்களைக் காப்பாற்றும்படி அலறினர். சிறிது நேரத்தில் பேருந்து ஆற்றில் மூழ்கியது. இது குறித்து தகவல் அறிந்து வந்த பொலிஸார் மற்றும் நேபாள நாட்டு இராணுவத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம்செய்த 26 பேரது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 16 பேர் படுகாயங்களுடன் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்து குறித்து தகவலறிந்து அப்பகுதி மக்கள் விரைந்து வந்து பேருந்தை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 31 பேர் பலியானதாக மீட்புக் குழுவில் ஈடுபட்ட பொலிஸார் தெரிவித்தனர். இறந்தவர்கள் பெரும்பாலும் சப்திரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது. இந்த விபத்தில் இந்தியாவை சேர்ந்த பெண் ஒருவர் பலியாகியுள்ளார். இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (8)

## ...ல் பணக்காரர்

உயர்ந்து பெசோஸ் சொத்த மதிப்பு 700 கோடி அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பங்குகளும் 7 சதவிகித உயர்வை எட்டிய நிலையில், பெசோஸ் மதிப்பு 9060 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. பில் கேட்ஸ் மதிப்பு 9010 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது.

மூன்று மாதங்களுக்கு முன் முதல் முறையாக உலக பணக்காரர்கள் பட்டியலில் ஜெஃப் பெசோஸ் முதலிடம் பிடித்தார். அமேசான் நிறுவனத்தின் இரண்டாம் காலாண்டு வருமானம் வரலாற்றில் முதல் முறையாக அதிகரித்ததை தொடர்ந்து ஜெப் பெசோஸ் முதலிடம் பிடித்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாசு கூட வெடிக்கத்தெரியாத விமல் வீரவன்ச குண்டு வீசுவாரா?

## அமைச்சர் சரத் பொன்சேகா நக்கல்





(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பட்டாசு கூட வெடிக்கத் தெரியாத பயந்தவர் என்று அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். " புதிய அரசியல் அமைப்பொன்றை நிறைவேற்றினால் நாடாளுமன்றத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று விமல் வீரவன்ச கொந்தளித்துள்ளார்.

அவரது தாய்க் கட்சியான ஜே.வி.பியில் ஒருகாலத்தில் துணிச்சலான ஒரு சிலர் இருக்கவே செய்தார்கள். ஆனால் அவர்களைப்போன்ற தைரியம் விமலுக்குக் கிடையாது.

அவர் பட்டாசு வெடிக்கவே பயப்படும் பயந்தாங்கொள்ளி. அதேபோன்று புதிய அரசியலமைப்பை ஆதரிப்பவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட வேண்டும் என்றும் கூட்டு எதிர்க்கட்சியின் ஒரு சிலர் கொக்கரிக்கின்றனர்.

அவ்வாறானவர்கள் அடுத்தவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முன்னர் தங்கள் மீதும் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படலாம் என்பதைப் புரிந்து கொள்வது நன்று என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டிருந்தது.

எல்லோரும் சண்டியர்களாக செயற்பட்டார்கள். ஆனால், அந்த நிலை தற்போது மாறிவிட்டது.

சட்டம் ஒழுங்கான முறையில் அமுல்படுத்தப்படுகின்றது. அதன் காரணமாக எந்தவொரு நபருக்கும் காட்டுத் தர்பார் நடத்த முடியாது என்றும் அமைச்சர் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழும்பு வந்தது யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ்





(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படையின் விமானந்தாங்கிப் போர்க்கப்பலான, யு.எஸ்.எஸ். நிமிட்ஸ் நேற்று முன்தினம் மாலை கொழும்பு துறை கொழும்பு வந்தது.

அதிவேக ஏவுகணை போர்க்கப்பலான யு.எஸ். முகத்தை வந்தடைந்துள்ளது.

11 ஆவது விமானந்தாங்கி தாக்குதல் அணிக்குத் தலைமை தாங்கும், யு.எஸ்.எஸ்.நிமிட்ஸ், அதன் துணைப் போர்க்கப்பல்களான நாசகாரிகளுடன்இணைந்து, நேற்று முன்தினம் எஸ். பிரின்சிரோன், நாசகாரிக் கப்பல்களான, யு.எஸ். எஸ். ஹவார்ட், யு.எஸ்.எஸ். சூப், யு.எஸ்.எஸ் பின்க்னி, யு.எஸ்.எஸ் கிட் ஆகியனவும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

அமெரிக்கப் போர்க் கப்பல்களுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

இந்தப் போர்க்கப்பல்கள் நாளை 31ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ளது.

இதன்போது, இலங்கை கடற்படையினருடன் இணைந்து அமெரிக்க கடற்படையினர் பயிற்சிகள் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன், அமெரிக்கக் கடற்படையினர் பல்வேறு சமூக நலன்புரி வேலைத் திட்டங்களிலும் ஈடுபடவுள்ளனர். (இ-7)

## ஜேர்மனி, இத்தாலியிலிருந்து

# நாடு கடத்தப்பட்ட 4 தமிழ் இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து நாடுகடத்தப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நான்கு இளைஞர்களும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளுக்குப் பின்னர் மினுவாங்கொட நீதிமன்றத்தில் இவர்கள் நிறுத்தப்பட்டனர்.

இதையடுத்து நால்வரையும், இன்றுவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சட்டவிரோத ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயன்றதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நடத்தும் விசாரணைகளுக் குப் புறம்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவையும் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### திருந்தாத ஜென்மங்களை திருத்தும் வழி!

குழம்பு சுண்டினதும் போதும், இன்னும் சுண்ட வைக்காதே அப்புறம் உப்புக் கரிக்கும் என்கிறாள் அம்மா.

மகள் அதைக் கேட்டுக்கொண்ட பிறகும் சுண்ட சுண்ட வைக்கிறாள். ஆம்! உப்புக் கரிக்கிறது.

அவருக்கு கை மாத்துக் கொடுக் காதீங்க, திரும்ப வாராது! என்கிறாள் மனைவி. இல்லை அவன் ரொம்ப நல்லவன் என்று கொடுக்கிறார் கணவர். பணம் போச்சு! மனைவி சொன்னது சரி.

இங்க்பில்லர் வைச்சு பேனாவை நிரப்பு. அப்படியே ஊற்றாதே! சிந்திடும்! என்கி றார் அப்பா! சரியென்று கேளாமல் மையைக் கொட்டி வீணாக்குகிறாள் மகள்!

இந்த மூன்று சந்தர்ப்பங்களில் சொல்லியும் கேட்கவில்லை என்பதற் காகத் திட்டுத் தான் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் இதே போல் தொடர்ந்து சில சம்பவங்கள் நிகழும் போது சம்பந்தப்பட்டவர்கள் வெறுப்பின் விளிம்பிற்கே போய் விடுகிறார்கள்.

ஐயோ அவனுக்கா? நான் புத்திமதி சொல்றதா? எக்கேடோ கெட்டுப் போக ட்டும்! எனக்கென்ன வந்தது? என்கிற வெறுப்புத் தொனியில் மிக வேண்டி யவர்களே பேசுகிறார்கள்.

படிச்சுப் படிச்சுச் சொன்னேன். சொன் னாக் கேட்டாத் தானே ? இப்ப யாரு கெடந்து அவதிப்படுகிறாங்க? நீதானே? உன் நன்மைக்குத் தான் சொல்றேன் என்று உனக்கு ஏன் புரியமாட்டேங்குது? என்கிற வழக்கமான வசனங்களையெல்லாம் எட்டுக் கட்டையில் கத்தாமல் சில புதிய அணுகுமுறைகளைக் கையாள வேண்டும்.

எனவே சொன்னதைக் கேட்காதவர்களுடன் காலந்தள்ள வேண்டியவர்கள் முதல் கட்டமாகப் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இரண்டா வதாக பெரிதாகப் பாதிக்காத விட யங்களை அவர்கள் போக்கிற்கே விட்டுப் பிடிக்க வேண்டும். சொல்லித் திருந்தா தவர்கள் பட்டுத் தெரிந்து கொள்ளட்டும்.

மூன்றாவதாக நாம் சொன்னதே நடந்துவிட அவர்கள் கணிப்புப் பொய் த்து விட்ட நிலையில் உன் நன்மைக்குத் தான் சொன்னேன். பரவாயில்லை. இது இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்! என அனுசரணையாகப் போக வேண் டுமே தவிர எக்காளமிடக்கூடாது. குத்திக் காட்டக் கூடாது.

நான்காவதாக அவர்களைத் தண்ணீர் தெளித்து உதறிவிடாமல் தொடர்ந்து ஆர்வம் காட்டி இப்படிச் செய்தால் இன்னது தான் நடக்கும் என்று அன்பாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

நான்கு முறை நம் கணிப்புச் சரியாக இருந்து அவர்கள் தவறும் பட்சத்தில் இதமாகச் சுட்டிக்காட்டப்பட்டால் போதும்.

அதன் பிறகு நாம் சொல்வதை யெல்லாம் இவர்கள் வேதவாக்காக எடுத்துக் கொண்டு விடுவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**



# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி!

## கொஸ்கொடையில் நேற்றுப் பயங்கரம்

(கொழும்பு)

கொஸ்கொடையில் நேற்று அதிகாலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் என்று தெரியவந்துள்ளது. முன்விரோதம் காரணமாகவே இப்படுகொலைச் சம்பவம் நடந்திருக்கிறது என்றும் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தில்பலியானவர்கள் 52 வயதான தந்தையும் அவரது இரண்டு மகன்களுமே என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று படுக்கையில் இருந்த மூவர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதேவேளை. கொஸ்கொடையின் மெனிக் கம பகுதியைச் சேர்ந்த 39 வயது நபர் ஒருவரும் துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளார். கொஸ்கொடை. குருந்துகம்பியஸ பகுதியில் நடத்தப்பட்ட மற்றொரு துப்பாக்கிச் சூட்டில், பதினைந்து வயது மாணவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கிடையே தொடர்பு இருப்பதாகவும், குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் ஏற்பட்ட முன்விரோதத்தின் விளைவாகவே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக, சில மாவட்டங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆய்வு மையத்தினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின், பிரதிப் பணிப்பாளர் பிரதிப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதன்படி, இரத்தினபுரி. மாத்தளை, கண்டி, நுவரெலியா மற்றும் கேகாலை ஆகிய பகுதிகளுக்கே இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மழையுடனான காலநிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

## சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் சமய தீட்சை எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோரின் பெயர்ப் பதிவு இறுதித் திகதி இன்றாகும் என சி.சக்திகிரீவன் அறிவித்துள்ளார். (இ-7)

## அதிபர்களுக்கும் இடமாற்றம்

### கல்வி அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

ஆசிரியர்கள் மாத்திரமின்றி 10 வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் சேவையாற்றும் தேசிய பாடசாலை அதிபர்களும் இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

காலி றிச்மன்ட் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு அமைச்சர் உரையாற்றினார்.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்விக் கட்டமைப்பின் சிறப்பான செயற்பாட்டிற்காக சரியான தீர்மானங்களை மேற்கொள்வதில் தாம் எந்த வகையிலும் பின்னிற்கப் போவதில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

## திருமண வீட்டில் நானே மாப்பிள்ளை மரண வீட்டில் நானே பிணம்

### மலையக அரசியல்வாதிகள் குறித்து சுரேஸ்

(கொழும்பு)

பெருந்தோட்ட மக்களின் நலனுக்காக கடந்த காலத்தில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில் விட்ட தவறை இனியும் செய்ய மாட்டேன் என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேலு சுரேஸ் தெரிவித்துள்ளார்.

கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படும் நிலையில், தமிழ் முற்போக்கு கூட்டணியினருடன் கலந்துரையாடிய பின்னர் எதிர்வரும் காலங்களில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

"எங்கள் நிலத்தில் எங்கள் வீடு" எனும் தொனிப் பொருளில் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு



ஹற்றன் - டன்பார் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மலையக மக்கள் உரிமையும், கௌரவமும் பெற்று வளர்ச்சியடையும் சமூகமாக மாறி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வீடுகள் தங்களது ஆனால் காணிகள் தோட்ட நிர்வாகத்திற்குரியது எனும் நிலைமை காணப்பட்டமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல தசாப்த காலங்களாக மலையகத்தில் அரசியல் செய்து திருமண வீட்டில் நானே மாப்பிள்ளை, மரண வீட்டில் நானே பிணம் என இருப்பவர்களை மக்கள் துடைத்தெறிய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வில் பெருந்தோட்டங்களைச் சேர்ந்த 2865 பயனாளிகளுக்கு காணி உறுதிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


AACHE HOT FOOD AND FOOD FACTORY KAITHADY

- சகல அரச நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைய மிக மிக தரமான உணவுகளை குறைந்த விலையில் வழங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு ஸ்தாபனம் ஆச்சி ஹொட் பூட்.
- கல்வி பயிலும் மாணவ சமூகத்திற்காக விசேட விலைக் கழிவுகளில் பாடசாலைகளுக்கு உணவு விநியோகம்.
- இன்று வடமாகாணத்தில் அதிகளவான உணவுகளை உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களுக்கு கட்டாயமாக்கப்பட்ட ஒரு நிறுவனமாக உள்ளது.
- நேரடி மேற்பார்வையின் கீழ் உணவு உற்பத்தி, பொதியிடல், விநியோக செயற்பாடுகள்.
- கைதடி உணவுத் தொழிற்சாலையை பார்வையிட்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.
- திருப்திகரமான உணவுடன் கூடிய சேவையே எமது பிரதான நோக்கம் ஆகும்.
- கைதடி மற்றும் வடக்கு விவசாயிகளின் வாழ்வுக்கு வலுவூட்டுவோம்.
- தினசரி கூடுதலான விவசாய உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்து சுய வருவாயை ஈட்டிக் கொள்ளவும்.
- சிறந்தவொரு வாழ்க்கையை முன்னெடுக்கவும் உதவி வருகிறது.
- கடுமையான தரக்கட்டுப்பாட்டு வேதனைக்கு உட்படுத்தப்பட்டு அதி உயர்தரம் உறுதி செய்யப்படுகிறது.

Aache Food Factory, Kaithady.
021 205 7455, 021 205 7456

Aache Hot Food Resturant
147, Palaly Rood, Thirunelvely,
021 22[illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பு ஏற்கனவே தயார்!

## விமலரத்ன தேரர் தகவல்



(கொழும்பு)

புதிய அரசியலமைப்புப் பணிகள் நிறைவடைந்து விட்டதாக அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்துள்ளார் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் வண.பெல்லன்வில விமலரத்ன தேரர்.

"புதிய அரசியலமைப்புக்கான எதிர்ப்புகள் இன்னும் அடங்காத நிலையில், அரசியலமைப்புப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்து விட்டதாக அரசின் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் என்னிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், அரசியலமைப்பைத் தயார் செய்த இரண்டு பேரின் பெயர்களும் எனக்குத் தெரியவந்துள்ளது. அது குறித்து உரிய நேரத்தில் அறிவிப்பேன்" என்று தேரர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியலமைப்பு வெகு விரைவில் பாராளுமன்றில் கையளிக்கப்படவுள்ளதோடு, பாராளுமன்ற உறுப்பினர்களை தவறான வழியில் அழைத்துச் சென்று புதிய அரசியலமைப்பை உறுதி செய்யும் முனைப்பிலும் அரசாங்கம் இறங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள தேரர், அரசியலமைப்பை எதிர்க்கும் மதத் தலைவர்களை அவமானப்படுத்தும் சதித்திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டால்

# ஆயுதம் ஏந்துவோம்

## கிழக்கிலிருந்து எச்சரிக்கை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டால் கிழக்கில் உள்ளவர்கள் ஆயுதமேந்தும் நிலை ஏற்படலாம் என்று கிழக்கு பொதுமக்கள் அமைப்பு அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

கிழக்கு பொதுமக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் திருகோணமலை மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகே புதிய அரசியல் அமைப்பை எதிர்த்து நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த விஜேசேகர தலைமையில் புதிய அரசியலமைப்புக்கு எதிராக கண்டன முழக்கங்களும் எழுப்பப்பட்டுள்ளன.

இதன்போது கருத்து வெளியிட்ட கிழக்கு பொதுமக்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜயந்த விஜேசேகர, புதிய அரசியலமைப்பின் மூலம் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அது நாட்டை பிரிவினைவாதத்தை நோக்கி நகர்த்திச் சென்றுவிடும்.

அவ்வாறான நிலையில் புதிய அரசியல் அமைப்பொன்றை நடைமுறைப்படுத்தவோ அல்லது வடக்கையும் கிழக்கையும் இணைக்கவோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எதிராக ஆயுதம் ஏந்துவதற்கு தமது அமைப்பின் உறுப்பினர்கள் தயங்கமாட்டார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (இ-7)

# சுதந்திரக் கட்சியின் கூட்டத்திற்கு மகிந்தவிற்கு அழைப்பு இல்லை



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. மகிந்த ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளர் உதித லொக்கு பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ம் திகதி நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவது குறித்து கலந்துரையாடப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்கத் தவறுவோர் வேறு ஓர் அரசியல் கட்சிக்கு ஆதரவாக செயற்படுவதாகவே கருதப்படுவர் என துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குறுகிய சிந்தனையால் புதிய அரசியல் யாப்பை சீர்குலைக்க வேண்டாம்

## சு.க.செயலர் அமைச்சர் துமிந்த கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசியல் யாப்பின் ஊடாக அனைவரும் ஒன்றிணைந்து சக்தி மிக்க நாட்டை உருவாக்க வேண்டும். மாறாக, அதனை குறுகிய சிந்தனையோடு நோக்கி பாதிப்பை ஏற்படுத்தக் கூடாதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், விவசாயத்துறை அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வட்டகொட மடக்கும்புர பிரதேசத்திலுள்ள வெலிகல வாவி புனரமைக்கப்பட்டு, நேற்று முன்தினம் சனிக்கிழமை அதில் மீன் குஞ்சுகள் இடப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாட்டிற்கு புதிய அரசியல் யாப்பொன்றை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானது. இதுவரை காலமும் அது தொடர்பில் சிந்திக்காத நிலையில், தற்போது அதுகுறித்து தீவிரமாக பேசி வருகின்றோம்.

கடந்த ஆட்சியின் போது இந்திய அரசாங்கம் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது, 13ஆவது திருத்தச் சட்டம் மட்டுமன்றி, 13 பிளஸ் தொடர்பிலும் பேசினார்கள். அதே போல் முன்னைய ஆட்சியில் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா நாட்டுப் பிரதிநிதிகளிடம் நாட்டில் அரசியலமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக உறுதியளிக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமை பேரவைக்கும் இதே எதிர்பார்ப்பை வழங்கினர். எனவே சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியலமைப்பு திருத்தம் ஒன்று தேவை என்பதே உண்மை.

அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துக்களை நாம் செவிமடுத்து வருகின்றோமே தவிர, எதனையும் அங்கீகரிக்கவில்லை. சிலர் இது தொடர்பில் வீணாக குழப்பமடைந்துள்ளனர்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. ஆகவே எந்த வொரு சமூகத்தினரும் குழப் பமடையாமல் நிதானமாக செயற்படுவது அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புதிய அரசியல் யாப்புப் பணிகளை குழப்ப வடக்கிலும் தெற்கிலும் முயற்சி



(ஏறாவூர்)

புதிய அரசியல் யாப்புப் பணிகளை குழப்புவதற்கு தெற்கிலும் வடக்கிலும் சில சக்திகள் முயற்சிப்பதாக கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச இளைஞர் சம்மேளனத்தினால் "மதுவற்ற நாடு" எனும் தொனிப் பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இளைஞர் விழிமது ஒழிப்பு சமூக நற்பணி வேலைத்திட்டம் நேற்று களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தெற்கில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் வெளிச்சம் என்ற அமைப்பை தொடங்கி பிரசாரங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்கின்றார்கள்.

அத்தோடு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச புதிய அரசியல் அமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்றத்தை குண்டு வைத்து தகர்க்கவேண்டுமென்கின்றனர்.

முன்னாள் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன புதிய அரசியல் அமைப்பை ஆதரிப்பவர்கள் துரோகிகள் அவர்கள். கொல்லப்பட வேண்டியவர்கள் என தெரிவிக்கின்றார்.

இவர்களைப் போலவே வடக்கிலும் தமிழ்மக்களின் உரிமைக்காக போராடுகின்றோம் எனக்கூறும் சிலரும் புதிய அரசியல் அமைப்பை எதிர்ப்பதோடு அதை ஆதரிப்பவர்கள் தமிழ்மக்களின் துரோகிகள் என்கின்றார்கள்.


வடக்கில் எதிர்ப்பவர்கள் இந்த அரசியலமைப்பில் தமிழருக்கான தீர்வு எதுவுமில்லையென்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் இந்த நாடு அமைதியாக இருக்கக்கூடாது. தமிழ் மக்கள் நிம்மதியாக இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் இனவாத குழுக்கள் செயற்படுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணைமுறி மோசடிகள் குறித்து பிரதமரிடம் விசாரணை இல்லை

## ஜனாதிபதி ஆணைக்குழு தகவல்



(கொழும்பு)


இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விசாரணை நடத்தாது என தெரிவிக்கப்படுகிறது. பிணைமுறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் சுமதிபால உடுகமசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமரிடம் விசாரணை நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். மாறாக பிரதமர் சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் தனது விளக்கத்தை ஆணைக்குழுவிடம் முன்வைப்பது போதுமானதாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி ஆணைக்குழுவின் அமர்வுகள் ஆரம்பமாகும் போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

துரித கதியில் இந்த விசாரணைகளை பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பிக்க ஆணைக்குழு விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கிழக்குப்படையினருடன் ராணுவத் தளபதி சந்திப்பு



(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாய்க்க கிழக்கு இராணுவப் படைத் தலைமையகத்திற்கு விஜயம்செய்தார்.

கிழக்கு இராணுவ படைத் தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் சென்ற இராணுவத் தளபதியை படைத் தலைமையகத்தின் தளபதியான மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர வரவேற்றதுடன் 7ஆவது பொறியியலாளர்ப் படையினரால் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது.

மேலும் இராணுவ அதிகாரிகள் மற்றும் படையினருடன் நலன்புரி விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டார்.

அந்த வகையில் 1000 படையினரைக் கொண்ட இத்தலைமை படையினருக்கு இராணுவத் தளபதி பயிற்சிகள் மற்றும் ஒழுக்கம் தொடர்பான விடயங்களை கடைப்பிடித்தலின் அவசியம் பற்றி எடுத்துக் கூறினார்.

இராணுவ தளபதி ஆணைச்சீட்டு அதிகாரியின் அழைப்பின் பேரில் படையினர்களுக்கான விடுதியை திறந்து வைத்து. அக்கட்டட தொகுதிகளையும் பார்வையிட்டார். அத்துடன் இப்படையணியில் புதிதாக அமைக்கப்பட்ட விடுதியில் இப் படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் விருந்துபசாரத்திலும் தளபதி கலந்து கொண்டார். (இ-7)

# வீதியில் பயணித்த பேருந்தில் திடீர் தீ

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் பயணித்த பேருந்து ஒன்றில், நேற்றுக்காலை திடீர் என தீ பரவியுள்ளது.

கடுவெல நோக்கி பயணித்து கொண்டிருந்த குறித்த பேருந்தில் கஹகுடுவ பிரதேசத்தில் வைத்து தீ பரவியுள்ளது.

பேருந்தில் தீ பரவியுள்ளதனை அறிந்த பிரதேச மக்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.



இந்நிலையில் விரைந்த தீயணைப்பு பிரிவு தீயை அணைத்துள்ளது.

தீ பரவலுக்கான காரணம் இதுவரையில் அறியப்படவில்லை. இதன்போது எந்தவொரு நபருக்கும் உயிர் ஆபத்துக்கள் ஏற்படவில்லை. (இ-7)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1234

Search for people, places and things Nagendram Home

### சாந்தி




### சாருகி



### வேணுஜன்

உன் தோழியை பார்த்ததும்
உன் பக்கத்தில நெருக்கமா
உட்கார்ந்தா அவ காதலி!

உன் காதலியைப் பார்த்ததும்
புன்னகையுடன் விலகி நடந்தா
அவ தோழி!

நீ யாரையுமே பார்க்காம நடந்தாலும்
அங்கே என்ன பார்வைன்னு
தலைல குத்தினா அவ மனைவி!

### சுகன்ஜன்




### பிரவீணா

என் புருஷனுக்கு
வழுக்கை விழுந்ததை
நினைச்சா எனக்கு
ரொம்ப கவலையா இருக்கு!
ஏன்?
எதிர்த்த வீட்டுக்காரி
அவ புருஷனை
தலை முடியை
புடிச்சி கிட்டு சுத்தி சுத்தி
அடிக்கிறதை பார்த்தா எனக்கு
பொறாமையா இருக்குது?

### தரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனை உரிமை பறிபோய் விட்டது!

## பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் புலம்பல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் எரிபொருள் விற்பனை செய்வதற்கான உரிமையை இலங்கை இழந்துள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவர் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நிர்மாணிக்கும் போது சர்வதேச கடற்பரப்பில் பயணிக்கும் கப்பல்களுக்கான எரிபொருள் மத்திய நிலையமாக அதனை மாற்றுவதும் ஒரு இலக்காக முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், நல்லாட்சி அரசாங்கத்தினால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கான குத்தகை ஒப்பந்தத்தில் துறைமுகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும், சீன நிறுவனமே மேற்கொள்ளும் வகையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகிய நடவடிக்கைகளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இனி மேல் மேற்கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழகத்தில் உடம்பை கீறிக் கொண்டு இலங்கை தமிழ் இளைஞன் போராட்டம்

(சென்னை)

தமிழகத்தின் மண்டபம் அகதிகள் முகாமில் அனுமதிக்கக் கோரி உடலில் காயங்களை ஏற்படுத்தி கொண்டு, போராடிய இலங்கையைச் சேர்ந்த இளைஞன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து கடந்த 2015ஆம் ஆண்டு தனுஷ்கோடி பகுதிக்கு சென்ற அஜாய் (வயது-24) பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் கடவுச்சீட்டு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்ட இவருக்கு, நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தது. தண்டனை முடிவுக்கு பின் கடந்த ஆண்டு பெப்ரவரியில் மண்டபத்திலுள்ள அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் அஜாய் திடீரென முகாமில் இருந்து மாயமானார். இதன் பின் பல்வேறு ஊர்களில் சுற்றி திரிந்த அஜாய் நேற்று முன்தினம் மண்டபம் முகாமிற்கு சென்றுள்ளார்.

அங்குள்ள அலுவலர்களிடம் தான் இலங்கை அகதி எனவும், அதனால் அகதி முகாமில் தன்னை அனுமதிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

ஆனால் அகதிக்கான எந்த ஆவணங்களும் அஜாயிடம் இல்லாததால் அகதி முகாம் அலுவலர்கள் அவரை முகாமிற்குள் அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

இதையடுத்து தான்  கொண்டு வந்திருந்த கண்ணாடி துண்டினால் கழுத்து மற்றும் கை கால்களில் கீறிக் கொண்டு மண்டபம் முகாமின் முன்பு போராட்டம் செய்ததாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக தகவல் அறிந்த பொலிஸார் அஜாயை மீட்டு இராமநாதபுரம் அரச வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதனால் முகாம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. (இ-7)

# வடக்கிலிருந்து இராணுவத்தினரை உடன் விலக்குமாறு பிரிட்டன் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை துரிதப்படுத்துவதுடன், வடக்கிலிருந்து இராணுவத்தினரை விலக்கிக் கொள்ளுமாறும் பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தமிழர்களுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் போல் ஸ்கெலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் வடக்கில் இருந்து இராணுவத்தினர் விலக்கிக் கொள்ளப்படுதல் தொடர்பான அறிக்கையொன்று எதிர்வரும் 2018ஆம் ஆண்டின் மார்ச் மாத மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# மலேசியா செல்லவிருந்த இளைஞன் விபத்தில் பலி

(ஏறாவூர்)

உழவியந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வடிகானுக்குள் விழுந்து மோதியதில் மலேசியா செல்லவிருந்த இளைஞன் அந்த இடத்திலேயே பலியாகிய சம்பவம் வவுணதீவு பாலக்காடு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இத்துயர சம்பவத்தில் புதிய காத்தான்குடி 3, கோழிக்காரர் வீதியைச் சேர்ந்த கலீலுர் ரஹ்மான் முஹம்மது ஹரிஸ் (வயது-23) என்ற இளைஞரே பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மேற்படி இளைஞன் தொழில் வாய்ப்புப் பெற்று இன்று திங்கட்கிழமை மலேசியா நாட்டுக்குச் செல்லவிருந்த நிலையில் தனது நண்பருடன் சேர்ந்து உன்னிச்சைக் குளத்தைப் பார்வையிட்டு பொழுதைப் போக்குவதற்காக இருவரும் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

அவ்வேளையில் வவுணதீவு பாலக்காடு எனும் இடத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்த உழவியந்திரத்தை முந்திச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளை வேகப்படுத்தியபோது அது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதி மருங்கிலிருந்த வடிகானுக்குள் மோதி விழுந்துள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார். அவரது நண்பரான காத்தான்குடியைச் சேர்ந்த முஹம்மத் ஸியாம் (வயது-23) என்ற இளைஞன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்பற்றி வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# மழையால் வீடுகள் சேதம்

(கொழும்பு)

நாவலப்பிட்டி ஹுனுகொட்டுவ பகுதியில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையால் அப்பகுதியிலுள்ள சிறிய குளம் ஒன்று உடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இதன்காரணமாக குறித்த பகுதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்களின் ஐந்து வீடுகளும் பாதிப்படைந்துள்ளன.

வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததால் வீட்டு உபகரணங்கள் சேதமடைந்துள்ளதாகவும், வீடுகளில் தங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்த 20 பேர் தற்காலிகமாக அயலவர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவுகளை வழங்குவதற்கு தோட்ட முகாமைத்துவத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் குறித்த வெள்ளத்தின் காரணமாக ஹுனுகொட்டுவ பாடசாலைக்கு செல்லும் மார்க்கத்தில் அமைந்திருந்த பாலம் ஒன்றும் சேதமடைந்துள்ளதாகவும், மீண்டும் குறித்த பகுதிக்கு சென்று வசிப்பதற்கு தாம் அச்சப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இலங்கையுடனான தொடர்பினை வலுப்படுத்த ஈரான் எதிர்பார்ப்பு

(தெஹ்ரான்)

ஈரான் மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவை வலுப்படுத்த எதிர் பார்த்துள்ளதாக, ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி தெரிவித்தார்.

இதன்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான, கலாசாரம், அறிவியல் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளிலான உறவினை மேலும் வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கான புதிய இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள, மொஹமட் கரீப் அனிஸ்சின் நியமனப் பத்திரத்தை கையளிக்கும் நிகழ்வின் போதே, ஈரான் ஜனாதிபதி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பில் புதிய வேலைத் திட்டங்களை கட்டியெழுப்புவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக, தெரியவந்துள்ளது.

அத்துடன் வர்த்தகம் வங்கிகள் ஊடாக இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க ஈரான் ஜனாதிபதி இதன்போது இணங்கியுள்ளார். (இ-7)

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கொரிய கப்பலுக்கு விஜயம்

கொரிய கடற்படையின் "காங் கம் சான் மற்றும் ஹேவசொன்" ஆகிய இரு கப்பல்களையும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன பார்வையிட்டார்.



குறித்த இரு கப்பல்களும் கடந்த 26ஆம் திகதி இலங்கைக்கான நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பல்களை நேற்று முன்தினம் பார்வையிடுவதற்கென சென்ற இராஜாங்க அமைச்சரை குரூஸ் பயிற்சி பணிக்குழுவின் கட்டளைத்தளபதி, ரியர் அட்மிரல் யாங் யொங் மொவினால் கடற்படை மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்.

கப்பல்களை பார்வையிடச் சென்ற இராஜாங்க அமைச்சர் அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார். மேலும், இந்த நிகழ்வினை நினைவு கூரும் வகையில் பரஸ்பரம் நினைவுச் சின்னமும் பரிமாறப்பட்டன.

இந்த நிகழ்வில், இலங்கைக்கான கொரிய நாட்டுத் தூதுவர் வொன் சாம் சாங், கடற்படைக் கட்டளைத்தளபதி வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்க, இராஜதந்திர உறுப்பினர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# பெருந்தொகை மருந்துகளுடன் பெண் உள்ளிட்ட இருவர் கைது

(கொழும்பு)

மாதம்பை வைத்தியசாலைக்கு அருகில் நேற்றுக் காலை முப்பது இலட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான மருந்துகளுடன் பெண் ஒருவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, ஆட்டோ ஒன்றை சோதனை செய்த போதே, அதில் மருந்துகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ட்ரமடோல் எனப்படும் மருந்துகள் 2600 அடங்கிய 26 பெட்டிகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அப்பகுதி வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மேலும் 6000 மருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

இவர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நல்லாசிரியருக்கான குரு பிரதீபா பிரபா விருதும் அதிபர்களுக்கு பிரதீபா பிரபா விருதும் நேற்று முன்தினம் வழங்கி கௌரவிக்கப்பட்டன. யாழ்.இந்து மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் வட மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வட மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், வடமாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸ் உட்பட பலரும் வழங்கிக் கௌரவித்தனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# கொழும்பிலிருந்து நேரடியாக நேற்று முதல் அவுஸ்திரேலியாவுக்கு விமான சேவை!

(கொழும்பு)

கொழும்பிலிருந்து அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரம் வரையான நேரடி விமான சேவை நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

மெற்பேர்னுக்கான விமான சேவை தினசரி இடம்பெறும் என ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கன்எயார்லைன்ஸ் விமான சேவையின் புதிய நேரடி விமான சேவையால் பல இலங்கையர்களுக்கு நன்மை ஏற்பட்டுள்ளது.

மெல்பேர்ன் நகரில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்களுக்கும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கும் இந்தச்சேவை பயனுள்ளதாக அமையவுள்ளது.

கொழும்பு - மெல்பேர்ன் நேரடி விமான பயணத்திற்காக நவீனவசதிகளைகொண்ட ஏ-330 ரக விமானம் பயன்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய கொழும்பு - மெல்பேர்ன் நேரடி விமான பயணத்திற்கான நேரம் 10 மணித்தியாலங்களாக குறைவடைவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# எவர் முதலமைச்சரானாலும் எதனையும் சாதிக்க முடியாது

## முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒரு வருடகாலம் இருக்கின்றது. ஆனால், இப்போதே அடுத்த முதலமைச்சருக்காக யாரை நியமிப்பது என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். எவரும் முதலமைச்சராகலாம்.

ஆனால் எவர் முதலமைச்சரானாலும், தற்போதுள்ள அரசியலமைப்பின் கீழ் பெரிதாக எதனையும் சாதித்து விட முடியாது என்று முன்னாள் விவசாய அமைச்சரும் வடமாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி வீரகத்தி விநாயகர் சனசமூக நிலையத்தின் பவளவிழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினருக்கும் ஒவ்வொரு வருடமும் 60 இலட்சம் ரூபா குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியாக ஒதுக்கப்படுகிறது. இந்நிதியில் இருந்து தான் கட்டுமான உதவிகளைக் கேட்டுவரும் சனசமூக நிலையங்களுக்கும் வாழ்வாதாரம் கேட்டுவரும் பொதுமக்களுக்கும் உதவிகளைச் செய்து வருகிறோம்.



ஆனால், இந்தக் குறைந்தளவு நிதியில் உதவி கோருபவர்களின் தேவையை முழுமையாக எங்களால் நிறைவேற்ற முடியாமல் உள்ளது. அதுமாத்திரம் அல்ல, இந்தக் குறைந்தளவு தொகையைக்கூட நாங்கள் விரும்பியதுபோன்று எங்களால் வழங்க முடியாமல் உள்ளது.

எனக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு மாணவிக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு துவிச்சக்கரவண்டியை வழங்கியிருந்தேன். அந்த மாணவியின் வறுமை நிலையை எடுத்துச் சொல்லி அவருக்கு உதவி செய்யுமாறு கிராம சேவையாளர் ஒருவர் எனக்குப் பரிந்துரைக் கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால், அந்த மாணவி நன்றாகப் படிக்கும் மாணவி என்று அதிபரின் பரிந்துரை இல்லாமல் நான் துவிச்சக்கரவண்டியை வழங்கியது தவறு என்று கணக்காய்வுக்குழு எங்களிடம் விளக்கம் கேட்டது. பாடசாலையில் வழங்கப்படும் மதிய உணவுதான் வறிய அந்த மாணவிக்கு ஒருநாளில் கிடைக்கக்கூடிய சத்துணவு. பாடசாலை சென்றால்தான்ஒருவேளைஉணவு தன்னும் அந்த மாணவிக்குக் கிடைக்கும். அதனால் தான் நான் அந்த மாணவிக்கு துவிச்சக்கரவண்டியை வழங்கினேன்.

வடக்கு மாகாணசபையின்கையாலாகாதநிலையை விளக்குவதற்கு இந்த ஒரு உதாரணமே போதும். மத்திய அரசாங்கத்தின் சுற்று நிருபத்துக்குச் சேவகம் செய்யும் ஊழியர்களாகவே முன்னாள், இன்னாள் அமைச்சர்கள்எல்லோரும்உள்ளோமே தவிர, சுயமாக நாம் எதனையும் செய்ய முடியாதவர்களாகவே உள்ளோம். எனினும் எங்கள் சக்திக்கு மீறிப் பல பணிகளை நாங்கள் முன்னெடுத்திருக்கிறோம். இதனைப் புரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்தும் புரியாததுபோல் அரசியல் காரணங்களுக்காக வடக்கு மாகாணசபை வினைத்திறன் அற்றது என்ற குற்றச்சாட்டுளைப் பலர் முன்வைத்து வருகிறார்கள். வடக்கு மாகாணசபை சுயாதீனமாகத் தொழிற்படக்கூடியவாறு அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படாதவரை மாகாண சபையால்சிறப்பாக இயங்க முடியாது. முதலமைச்சர், அமைச்சர்கள் எல்லோரும் பெயரளவுக்குத்தான் என்பது தான் யதார்த்தம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# முட்டாள்களாக சரித்திரத்தில் இடம்பிடிக்க விரும்பவில்லை

## முன்னாள் முதலமைச்சர் கூறுகிறார்

(ஏறாவூர்)

ஜனநாயகத்தின் வெற்றிக்கான ஒரு விடயமாக 20 ஆவது அரசியல் திருத்தத்தை நாங்கள் பார்க்கின்றோம். அதனை ஆதரிக்காத அரசியல் முட்டாள்களாக நாம் சரித்திரத்தில் இடம்பிடிக்க விரும்பவில்லை என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.



கலப்புத் தேர்தல் முறை சட்ட ஏற்பாடுகள் பற்றி அறிவூட்டும் நிகழ்வு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் ஏற்பாட்டில் ஏறாவூர் அல்முனீறா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது அவர்மேலும் உரையாற்றுகையில்,

சமகாலத்தில் சிலாகித்துப் பேசப்படுகின்ற பல விடயங்கள் பற்றித் தெளிவில்லாத் தன்மை இருப்பதால் அவற்றைத் தெளிவுபெற்றுக் கொள்ள வேண்டிய கடமை பொதுவாக ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு. குறிப்பாக அரசியல் ஆர்வலர்கள் இந்த விடயங்களைப் புரிந்து கொண்டால் தேவையற்ற குழப்பங்களைத் தவிர்த்துக் கொள்ள வழியேற்படும்.

20 ஆவது அரசியல் திருத்தம், மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டத்திலே பெண்கள் உள்வாங்கப்படுகின்ற விடயம், 50 இற்கு 50 என்கின்ற கலப்பு முறைத் தேர்தல் விடயம், மாகாண சபைகள் எல்லை மீள் நிர்ணய விடயம் என்பன இவற்றில் பிரதானமானவை.

20 ஆவது அரசியல் திருத்தத்தை கிழக்கு மாகாண சபை ஏன் எதிர்த்தது? அதன் பின்பு ஏன் ஆதரவு வழங்கியது என்கின்ற விடயமும் சிலாகித்துப் பேசப்பட்டு வருகின்றது. இது தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

கிழக்கு மாகாண சபை மட்டுமல்ல வேறு சில மாகாண சபைகளும் இதனை எதிர்த்தன. 20 ஆவது அரசியல் திருத்தத்திலே ஒரேயொரு விடயம் மாத்திரம் தான் நாங்கள் எதிர்த்த விடயம்.

அதாவது மாகாண சபைகள் கலைக்கப்பட்டு திகதி அறிவிக்கப்படுகின்ற விடயம் நாடாளுமன்றத்தால் தீர்மானிக்கப்படும் என்ற ஒன்றைத்தான் நாங்கள் கரிசனைக்கு எடுத்துக் கொண்டு அது பற்றி மிக உன்னிப்பாக பரிசீலித்தோம்.

மாகாண சபையினுடைய முதலமைச்சருக்கு இருக்கின்ற அதிகாரமாக உள்ள மாகாண சபையைக் கலைக்கின்ற அதிகாரம் அதனை நாடாளுமன்றம் தன்னகத்தே கைப்பற்றிக் கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம்.

அதற்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருந்த வேளையிலே சட்டமா அதிபர் மூலமாக உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தத்திருத்தலே மாகாண சபையினுடைய தேர்தல்கள் எந்த மாகாண சபை முதலாவதாக கலைக்கப்படுகின்றதோ கலைக்கப்படுகின்ற அந்தத் திகதியிலிருந்து சரியாக ஒரு வருடத்தின் பின்னர் இயல்பாகவே அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு தேர்தல் இடம்பெறும்.

மாகாண சபையின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி தொடர்ந்திருக்கும் என்பது திருத்தத்திலே உள்ளடக்கியிருந்த இரண்டாவது முக்கியமான விடயம்.

இந்த 20 ஆவது அரசியல் திருத்தத்திலே "எல்லை நிர்ணயம், தொகுதி வாரி முறைமை" என்கின்ற எந்தவொரு வசனத்தையும் எங்காவது மேற்கோள் காட்ட முடியுமா?

இவை ஒன்றையுமே அறியாது சில குழப்பவாதிகள் மக்களைக் குழப்புகிறார்கள்.

மாகாண சபையில் எங்களுக்குத் தரப்பட்ட திருத்தச் சட்ட வரைவு பொதுவெளியில் விடப்பட்ட ஒன்று. இதில் எந்தவித ஒளிவுமறைவுமில்லை. அத்தோடு உயர் நீதிமன்றத்திலே உள்ள ஆவணம் அது.

நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட விடயம் 20ஆவது அரசியல் திருத்தம் அல்ல. நாடாளுமன்றத்திலே மாகாண சபைகள் சட்டத்திருத்தத்திற்குள் வேறொரு திருத்தம் கொண்டு வரப்பட்டு "தொகுதி, எல்லை நிர்ணயம்" என்ற சுத்துமாத்துக்கள் எல்லாம் புகுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விடயத்திற்கும் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 20ஆவது அரசியல் திருத்தத்திற்குமிடையில் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன.

மகிந்தவின் ஆட்சியிலே அவருடைய அரசியல் வெற்றிக்காக அவருக்கு விரும்பிய நேரத்திலே தேர்தல்களை நடத்தக்கூடியவாறு ஏற்பாடுகள் இருந்தன. அதில் அவர் விரும்பிய மாகாண சபைகளைக் கலைப்பதும் உள்ளடங்கியிருந்தது.

அது முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமான முறை என்று நாமெல்லோரும் ஆதங்கப்பட்டோம்.

ஜனநாயகத் தன்மை என்றால் எல்லா மாகாணங்களும் ஒரே தினத்தில் தேர்தல் நடத்தப்பட்டு ஒரே தினத்தில் ஆட்சியேறி ஒரே தினத்தில் கலைக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லாது விட்டால் ஆட்சியிலே இருப்பவர்கள் தங்களது முழு அதிகாரத்தையும் அரசியல்வெற்றி கொள்ளப் பயன்படுத்துவார்கள்.

மக்களால் தெரிவு செய்யப்படாத ஒரு தனி அதிகாரநபராக இருக்கும் மாகாண ஆளுநருடைய கையிலே ஒட்டுமொத்த மாகாண மக்களின் ஆட்சி தலைவிதியாக இப்பொழுது பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதை சில அரசியல்வாதிகள் சரியெனக் கூறி குதூகலிக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

# ஒரு பைசாவின் அருமை!

28.10.2017 தொடர்ச்சி...

அதுவரை கவலையோடு நின்றிருந்தவன் நீதிபதியின் இந்தச் சொற்களைக் கேட்டு முகம் மலர்ந்தான். "ஐயா, இந்தக் குற்றத்துக்கு நீங்க எவ்வளவு வேணும்னாலும் அபராதம் விதிங்க ஐயா.நான் இப்பவே கட்டிடறேன்." என்றான் கர்வமாக.


அவன் மடியில் கட்டுக் கட்டாகப் பணம் இருந்ததே அதன் காரணம். நீதிபதி புன்னகையுடன்,

"நீ யாரிடமும் கேட்கக் கூடாது. உன் கையிலிருந்து பணத்தைக் கட்டவேண்டும். பிறகு பின்வாங்கக் கூடாது." என்றார்.

சரியென்று தலையை அசைத்தான் கதிர்வேலு.

"அப்படியானால் ஒரே ஒரு பைசாவை அபராதமாகக் கட்டி விட்டுப்போ. இல்லையென்றால் ஒரு வருடம் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும்."

திடுக்கிட்ட கதிர்வேலு தன் பையைத் துழாவினான். சட்டை மடியென எங்கு தேடியும் அவனுக்கு ஒரு பைசா கிடைக்கவில்லை. நோட்டுக் கட்டுக்களாக இருந்தனவே தவிர ஒரு பைசாக் காசு அவனுக்குக்கிடைக்கவே இல்லை.



புன்னகை புரிந்த நீதிபதி, "இப்போது ஒரு பைசா உனக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது பார்த்தாயா. அது போலத்தான் மனிதர்களுக்குள் ஏழை என்றும் எளியவன் என்றும் துச்சமாக எண்ணி அவர்களைத் துன்புறுத்தக் கூடாது. இந்த உண்மையை சிறைவாசம் செய்த பிறகாவது புரிந்து நடந்து கொள்.

உன்னைத் திருத்தத்தான் இந்த சிறைத் தண்டனை." என்றார்.

அதுநாள் வரை தான் தவறாக நடந்து வந்ததற்காக வருந்தியபடியே சிறைச்சாலைக்குச் சென்றான் கதிர்வேலு.இனி அவன் திருந்தி விடுவானல்லவா?

ஒரு பைசாதானே என எளிதாக எண்ணியதால் அதுவே அவன் சிறை செல்லக் காரணமாக அமைந்தது. ஏழைகள் என்று பிறரை எண்ணி ஏளனமாக நடத்தியதால் குற்றவாளியென்று நிரூபிக்கப்பட்டான்.

அதனால் உருவத்தைப் பார்த்தும் செல்வ நிலையை வைத்தும் மனிதரை நாம் மதிப்பிடக் கூடாது.

இதையே வள்ளுவரும், "உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" என்றார்.

ஒரு தேரின் அச்சாணி சிறிதாக இருந்தாலும் அதன் பயன்பாடு மிகப் பெரிதன்றோ. அதனால் உருவத்தைப் பார்த்து யாரையும் மதிப்பிடக் கூடாது.செல்வத்தின் பெருமையை ஒரு பைசாவின் மூலம் கதிர்வேலுவும் தெரிந்து கொண்டிருப்பான்.

(முற்றும்).

## 10.2017 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1502- வாஸ்கொடகாமா இரண்டாவது தடவையாக கோழிக்கோடு வந்தார்.

❖1905- ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலாஸ் ரஷ்யாவின் முதலாவது அரசியலமைப்பை அறிவித்து பிரதிநிதிகள் அவையை நிறுவினான்.

❖1918- ஒட்டோமன் பேரரசு கூட்டுப் படைகளுடன் உடன்பாட்டுக்கு வந்ததில் மத்திய கிழக்கில் முதலாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

❖1920- அவுஸ்திரேலியக் கம்யூனிஸ்ட் கட்சி சிட்னியில் அமைக்கப்பட்டது.

❖1922- முசோலினி இத்தாலியின் பிரதமர் ஆனார்.

❖1925- ஜோன் லோகி பயர்ட் பிரித்தானியாவின் முதலாவது தொலைக்காட்சி ஒளிபரப்பியை அமைத்தார்.

❖1941- மேற்கு உக்ரைனில் 1,500 யூதர்கள் நாசிகளினால் பெல்செக் வதைமுகாமிற்கு அனுப்பப்பட்டனர்.

❖1945- இந்தியா ஐ.நாவில் இணைந்தது.

❖1961- ஜோசப் ஸ்டாலினின் உடல் மொஸ்கோவின் கிரெம்ளினில் லெனின் நினைவகத்தில் இருந்து அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

❖1964- இலங்கையின் மலையகத் தமிழர்களை நாடு கடத்த உதவிய சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

❖1970- வியட்நாமில் இடம்பெற்ற பெரும் வெள்ளம் காரணமாக 293 பேர் கொல்லப்பட்டு 200,000 பேர் வீடுகளை இழந்தனர்.

❖1972- சிக்காகோவில் இரண்டு பயணிகள் தொடரூந்துகள் மோதியதில் 45 பேர் கொல்லப்பட்டனர்.

❖1973- ஐரோப்பாவையும் ஆசியாவையும் இணைக்கும் பொஸ்பரஸ் பாலம் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் அமைக்கப்பட்டது.

❖1985- சலேஞ்சர் விண்ணோடம் தனது கடைசி வெற்றிகரமான பயணத்தை ஆரம்பித்தது.

❖1991- மத்திய கிழக்கு அமைதி மாநாடு மாட்ரிட் நகரில் ஆரம்பமானது.

❖2001- இலங்கைப் பிரதமர் பேசவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் அருகே வெடிகுண்டு வெடித்ததில் 4 பேர் இறந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

❖2006- ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன.

❖2006-பாகிஸ்தானின் எல்லையோரத்தில் கார் பகுதியில் உள்ள மதரசா மீது இராணுவம் நடத்திய தாக்குதலில் 80 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

❖1735-ஜான் ஆடம்ஸ், அமெரிக்காவின் 2வது அரசுத் தலைவர் (இ. 1826)

❖1898- இராய. சொக்கலிங்கம், தமிழறிஞர் (இ. 1974)

❖1908- முத்துராமலிங்கத் தேவர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1963)

❖1909- ஓமி பாபா, இந்திய-பிரெஞ்சு இயற்பியலாளர் (இ. 1966)

❖1942- சமல் ராஜபக்ஷ, இலங்கை அரசியல்வாதி

❖1953- சார்லஸ் மார்டின் ஸ்மித், அமெரிக்க நடிகர், இயக்குநர்

❖1960- டியேகோ மரடோனா, எர்ச்செந்தீனக் கால்பந்து வீரர்

❖1972- புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி, ஈழத்து அரசியல் ஆய்வாளர் (இ. 2009)

### இறப்புகள்

❖1883- தயானந்த சரசுவதி, இந்திய மெய்யியலாளர் (பி. 1824)

❖1910- ஹென்றி டியூனாண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற சுவிட்சர்லாந்தவர் (பி. 1828)

❖1969- அனந்தராம தீட்சிதர், தமிழக சமய சொற்பொழிவாளர் (பி. 1903)

❖1972- பதே சிங், சீக்கிய சமய, அரசியல் தலைவர் (பி. 1911)

❖1973- ரா. கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (பி.1902)

❖1974- பேகம் அக்தர், இந்தியப் பாடகி, நடிகை (பி.914)

❖1979-சுபத்திரன், இலங்கையின் முற்போக்கு இலக்கிய கவிஞர் (பி. 1935)

❖1990- வி. சாந்தாராம், இந்திய நடிகர், இயக்குநர் (பி. 1901)

❖1999- சௌமியமூர்த்தி தொண்டமான், இலங்கை மலையகத் தமிழர்களின் அரசியல் தலைவர் (பி. 1913)

### சிறப்பு நாள்

❖[illegible]

❖தேவர் ஜெயந்தி (முக்குலத்தோர் சமூகம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 180 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 150 | 95 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 350 | 600 | 450 | 480 | 600 | 700 |
| தக்காளி | 200 | 200 | 140 | 170 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 70 | 60 | 80 |
| கோவா | 150 | 200 | 80 | 120 | 160 | 120 |
| கரட் | 100 | 250 | 80 | 200 | 200 | 80 |
| பூசணி | 80 | 60 | 40 | 60 | 60 | 50 |
| புடோல் | 80 | 120 | 60 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 90 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 450 | 200 | 280 | 400 | 250 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 140 | 160 | 200 | 130 |
| பாகற்காய் | 400 | 600 | 300 | 270 | 200 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 80 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 200 | 80 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 160 | 100 | 100 | 160 | 200 |
| லீக்ஸ் | 150 | 300 | 170 | 220 | 200 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 60 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 300 | 200 | 200 | 200 | 400 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 100 | 140 | 200 | 60 |
| போஞ்சி | 250 | 300 | 100 | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 100 | — | 140 | 140 |
| கீரை – 1பிடி | 20 | 30 | 30 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 130 | 150 | 180 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 75 | 60-80 | 90 |
| இராசவள்ளி | — | 500 | 250 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | — | 240 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 08 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | — | 60 | 30 | — | 80 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதத்தில் நிச்சயமாக வெற்றிபெற ஒரே ஒரு வழிதான் உண்டு. அது விவாதங்களைத் தவிர்ப்பது தான்.
*- டேல் கார்னிஜி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுக்குமா? குழி பறிக்குமா?

இடைக்கால வரைபு மீதான விவாதம் பாராளுமன்றத்தில் இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இடைக்கால வரைபு மீதான விவாதத்தின் போது பாராளுமன்றம் அதிரும் என்று கூறலாம். அந்தளவுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு கடுமையான எதிர்ப்பைக் காட்டவுள்ளது.

இதற்கு பௌத்த மகா சங்கங்களின் ஆதரவும் இருப்பதால் பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் ஆர்ப்பாட்டங்கள், தீயிட்டுக் கொளுத்தும் நடவடிக்கைகள் என ஏராளமான சம்பவங்கள் நிகழக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் ஆயத்த நிலையில் உண்டு என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

இடைக்கால வரைபு மீதான விவாத்தின்போது இப்படியொரு பதற்றநிலை ஏன்? எதற்கு? என்றால் எல்லாம் தமிழினத்துக்கு எதிரான பேரினவாதத்தின் கொதிப்பு ஏன்று கூறுவதே பொருத்துடையதாகும்.

காலத்துக்கு காலம் இவ்வாறான விடயங்களை முன்வைத்து அது தொடர்பில் கடும் எதிர்ப்புத் தெரிவித்து இந்த நாட்டில் இருந்து தமிழினத்தை அழிக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு பேரினவாதம் வருவதற்கான கருக்கட்டல் இப்படித்தான் ஆரம்பிக்கும். இதற்கு பல சாட்சியங்கள் உண்டு.

வன்னி யுத்தத்தில் தமிழ் மக்களைக் கொன்றொழித்த பின்னரும் சிங்களப் பேரினவாதமும் பௌத்த பீடங்களும் தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றன.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றினால் இந்த பாராளுமன்றத்துக்கு குண்டு வைக்க வேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கூறியிருந்தார். இன்னொரு உறுப்பினர் பாராளுமன்றத்துக்கு இடி விழ வேண்டும் என்றார்.

ஆக, தமிழ் மக்களுக்கு மிக சொற்ப உரிமைகளைக் கொடுத்தால்கூட அதனைத் தாங்க முடியாது என்றளவில் பாராளுமன்றத்துக்கு இடி விழட்டும் என்ற சாபமிடுமளவிலேயே சிங்கள பேரினவாதம் உள்ளதென்பதை இனி மேலாவது உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக எத்தனையோ தீர்மானங்களைக் கொண்டு வந்த இந்தப் பாராளுமன்றத்துக்கு குண்டு வைத்தால் என்ன? இடி விழுந்தால் என்ன? அதுபற்றித் தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

தமிழ் மக்களின் ஒட்டுமொத்தக் கருசனை, எதுவும் இல்லாத இடைக்கால வரைபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்து தமிழினத்தின் தலையில் மண்ணை கொட்டி விடுமோ என்பதுதான்.

பாராளுமன்றத்துக்கு இடி விழ வேண்டும் என்று சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறுவதெல்லாம் தமிழ் மக்களுக்கு ஏகப்பட்ட உரிமைகளும் அதிகாரங்களும் கொடுப்பது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்துவதற்காகவே.

இந்த மாயையில் மருண்டு விடாமல் தமிழ் மக்களுக்கான உரிமை, அதிகாரம் என்பவற்றை துணிச்சலோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்க வேண்டும்.

இதைவிடுத்து இடைக்கால வரைபை ஆதரித்தால் தமிழ் மக்களின் விடயத்தில் கூட்டமைப்பு குழிபறிப்பதாகவே பொருள்படும்.

# நீதிபதிகள் இளஞ்செழியன் மற்றும் ஸ்ரீநிதிக்கு பௌத்த சங்க பேரவை கௌரவம்

(கொழும்பு)

யாழ். உயர் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மற்றும் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் ஆகியோருக்கு உலக இளம் பௌத்த சங்க பேரவை விசேட கௌரவம் வழங்கி பாராட்டியுள்ளது.

இரு நீதிபதிகளின் சேவைகளை பாராட்டி விசேட நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அஸ்கிரிபீட மகாநாயக்கர் அதிசங்கைக்குரிய வறக்காகொட ஞானரத்ன தேரர் இந்த நினைவுச் சின்னங்களை இளஞ்செழியன் மற்றும் ஸ்ரீநிதி நந்தசேகரன் ஆகியோருக்கு வழங்கி வைத்தார்.

இன, மத, மொழி வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து சமூகங்களுக்கும் சிறந்த சேவையாற்றி முன்மாதிரியாக திகழ்ந்த நீதிபதிகளுக்கு இங்கு கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் சமாதானத்தை மேம்படுத்த இத்தகைய நீதிபதிகளின் சேவை மிக அவசியம் என்று தேரர் குறிப்பிட்டார்.

உலக இளைஞர் பௌத்த சங்க பேரவையின் 14 ஆவது மாநாடு கண்டி பல்லேகல மாகாண சபை கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது நீதிபதிகளான இளஞ்செழியன் மற்றும் ஸ்ரீநிதி ஆகியோருக்கு அஸ்கிரி பீட மாநாயக்கர் அதிசங்கைக்குரிய வறக்காகொட ஞானரத்ன கௌரவம் அளித்தார். (மு-11)

## முல்லையில் தேசிய விளையாட்டு மைதான பணி தொடர்பில் ஆராய்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, வட்டுவாகல் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் விளையாட்டு அரங்கின் வேலைகளையும் முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள விளையாட்டு மைதானம் தொடர்பான பணிகள் தொடர்பிலும் விளையாட்டு துறை அமைச்சின் விசேட குழு நேற்றையதினம் பார்வையிட்டது


முலலைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மத்திய அரசினால் நவீன வசதிகளுடன் கூடிய தேசிய விளையாட்டு அரங்கு அமைப்பதற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அளவீட்டு பணிகளும் நிறைவடைந்துள்ளது.

இதன் திட்டமிடல் மற்றும் அமைவிடம் தொடர்பாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சம்பத் திஸநாயக்க தலைமையிலான குழுவினர் பார்வையிட்டதுடன், அங்கு மேற்கொள்ள வேண்டிய வேலைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதில் அமைச்சின் பிரத்தியேக செயலாளருடன் மாகாண, மாவட்ட, பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர், விளையாடு வீரர்கள் எனப் பலரும கலந்து கொண்டனர். (மு-281)

## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

128



ரங்கமண்டபத்தை ஒட்டியிருப்பது திருமலைராயர் மண்டபம். விஜயநகர சிற்பக் கலைக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டு. குதிரை வீரர்கள், யாளி வீரர்கள் என மண்டபத்தின் ஒவ்வொரு தூணிலும் ஓரங்குலம்கூட விடாமல் சிற்பச் செதுக்கல்கள்.

திருமலைராயர் மண்டபத்தை ஒட்டி துவஜஸ்தம்பம் என்னும் கொடி மரமும் பலிபீடமும் தங்கத்தால் வேயப்பட்டுத் தகதகக்கின்றன.

கொடிமரத்தை அடுத்திருக்கும் வாயில் வெள்ளி வாயில். இந்த நுழைவாயிலின் கதவுகள் வெள்ளியால் வேயப்பட்டுள்ளன. இந்த நுழைவாயிலுக்கும் ஒரு ஒய்யார கோபுரம். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### அறிவுள்ள குழந்தை பிறக்க என்ன செய்ய வேண்டும்?

காவல் தெய்வம், குலதெய்வம், இஷ்ட தெய்வம், பெற்றோர்கள், சான்றோர்கள், இவர்களின் உண்மையான அனுக்கிரகத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

கணவன் அல்லது மனைவியின் உள்ள நிலைகளை புரிந்து இருவரது உள்ளங்களும் சந்தோஷமாக இருக்க என்ன செய்யவேண்டும்.

கர்ப்பதானத்திற்குரிய நட்சத்திரம், திதி, கிழமை, லக்கினத்தை முறையாகத் தேர்வு செய்யவேண்டும்.

கர்ப்பதானம் செய்யும் லக்கினத்தில் எவ்வித கிரகமும் இருக்கக்கூடாது. பெண் மாத குளியலுக்குப் பின் 2,3,4,6, 7,9,12,15 ஆவது நாள் கருத்தரிப்பின் அழகிய குழந்தை வம்சத்தை விருத்தி செய்யும் குழந்தை பிறக்கும்.

6 மாத குளியலுக்கு பின் 5 ஆவது நாள், 10 ஆவது நாள், 11 ஆவது நாள், 13 ஆவது நாள் கருத்தரித்தல் கூடாது.

7 கருத்தரிக்கக்கூடாத நாட்கள், இடங்கள்: ஏகாதசி, பௌர்ணமி, அமாவாசை, மாதப்பிறப்பு, விரதம் இருக்கும் நாட்கள், இறப்பு நடந்த வீடு, அந்நியர் வீடு, பொது இடம், பிறந்த நாள். (தொடரும்)

## உலக மார்பக புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் - ஐப்பசி 2017

மார்பக புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே இனங்காண்பதற்கு சுய மார்பக பரிசோதனை, பிணியாய நிலையாய மார்பக பரிசோதனை, மார்பக கதிர்படம் (Mamogram) சோதனை போன்ற முறைகள் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில் சுய மார்பக சோதனையினை மாதம், மாதம் செய்து வருதல் மிக முக்கியமான, இலகுவான சோதனை முறையாகும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்ப்பாணம் மாநகர சபை

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சமநிலை (Equanimity)



அறிவின் முழுமை பெற்ற ஞானியருக்கு இறைநிலையின் முழு வடிவமே பிரபஞ்சம். அதிலுள்ள எந்தப் பொருளையும் வெறுப்பு கொண்டு ஒதுக்கி விட முடியாது. பொதுவாக, துன்பம் தரும் ஒரு பொருளை, உடலுயிரை, செயலை வெறுப்பது, ஒதுக்குவது, பகைப்பது, அழிப்பது என்பது மனிதனுடைய இயல்பாகும். இது தன்முனைப்பால் உணர்ச்சி வயப்பட்டு வெளியாவதாகும்.

ஆனால், ஞானிகளோ இந்த எல்லை கட்டிய மனோ நிலையைக் கடந்தவர்கள். இப்பேரியக்க மண்டலத்திலுள்ள எந்தப் பொருளானாலும் அது பரிணாமத் தொடரிலே ஒரு தனித்த மதிப்புடையது. குறுகிய அறிவுடையோர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பொருள் தேவையே இல்லை என்றோ அல்லது ஏதோ ஒரு வகையில் துன்பமளிப்பதாகவோ தோன்றும்.

ஆயினும், அதுவே பிரபஞ்சப் பரிணாமம் என்ற இயக்க நியதியிலே வேறு பல நன்மைகளிலிருந்து பிரிக்க முடியாத, பல நன்மைகளுக்கு இயல்பூக்க வித்தாகவும் இருக்கும். சில நிகழ்ச்சிகள் மனிதன் அறியாமையால் ஆற்றிய செயல்களின் விளைவாக இருக்கும். அவை துன்பமளிப்பவையேயாயினும் அந்த வினைப்பதிவு அழியும் மட்டும் அது நிலைத்துத் தான் இருக்கும்.

இவற்றையெல்லாம் உணர்ந்து தெளிந்த அறிவிலே திட்டமிட்டு வாழ்பவர் ஞானி. அவருக்கு வெறுப்பு ஏது? மேலும் அவ்வாறு துன்பம் தந்தவரிடமும் வெறுப்புக் கொள்ளாத சால்பு நிலையைச் சார்ந்துள்ளவரே உண்மையில் ஞானியாவார். சிறந்த ஒரு குருவும் ஆவார். பிறருக்கு வழிகாட்டக் கூடிய தகுதியும் பெற்றவராவார். உணர்ச்சியிலே இந்தச் சமநிலை (Equanimity) அடைந்தவர் காட்டும் பாதையிலே நாம் சென்றோமானால் துன்பம் நம்மை அணுகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவறோயன் அதிரடி

# நியூட்டன் அணியை வீழ்த்தி கொற்றாவத்தை றேஞ்சஸ்

## இறுதிப் போட்டிக்கு தெரிவு

சிவறோயனின் அதிரடியான கோலின் மூலம் வடமராட்சி அணிகள் பங்குபற்றும் "மைலோ" கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி .

நேற்று முன்தினம் 28 ஆம் திகதி நியூட்டன் அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி. (க)



## வலைப்பாடு ஜெகமீட்பர் வெற்றி



மைலோ கிண்ண மாவட்ட மட்ட உதைபந்தாட்ட தொடரின் நேற்று முன்தினம் 28 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது. இப் போட்டியில் 02:01 என்ற ரீதியில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி வெற்றி பெற்றது.

# நாவாந்துறை சென்.மேரிசை வீழ்த்தியது கொழும்பு பொடவிற்ற யுனைற்றட்





பிரிவு 1ற்கான உதை பந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் 28 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு கூரே பார்க் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து கொழும்பு பொடவிற்ற யுனைற்றட் அணி மோதியது.

இப் போடியில் கொழும்பு பொடவிற்ற யுனைற்றட் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மைலோ கிண்ண உதைபந்தாட்டம் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் வெற்றி





மைலோ கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் (28-10-2017 ) சனிக்கிழமை காலை 8 மணியளவில் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில்நடை பெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து நாச்சிகுடா நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதியது

பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது நாவாந்துறை சென்.நீக்கிலஸ். அணி அவ் அணி சார்பாக அமிலன் 01 கோலினைப் போட்டார். (க)

## டேமியன் அதிரடி கோல்; பலாலி விண்மீன் வெற்றி



மாவட்ட மட்ட மைலோ கிண்ண போட்டியில் 01:00 என்ற கோல்கணக்கில் வலைப்பாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது பலாலி விண்மீன். நேற்று முன்தினம் 28 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சி வலைப்பாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாடியது. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் அணித் தலைவர் டேமியனின் அதிரடிக் கோலின் உதவியுடன் 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது பலாலி விண்மீன். (க)

## இறுதிப் போட்டி இடை நிறுத்தம்

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி 2017.10.29 அன்று நடைபெற இருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் இப்போட்டி இடை நிறுத்தப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பில் இருந்து...

பொலிஸ் குழு மேற்கொண்டிருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மணியம் தோட்டப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மீது இனந்தெரியாத இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து குறித்த இருவரையும் வழிமறித்து துப்பாக்கி சூட்டு தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இத் துப்பாக்கி சூட்டு தாக்குதலில் அதே இடத்தை சேர்ந்த தொன் போஸ்கோ ரிஸ்மன் என்ற இளைஞன் கொலை செய்யப்பட்டிருந்தார். அத்துடன் அவருடன் மோட்டார் சைக்கிளினை செலுத்தி சென்ற நிஷாந்தன் என்ற இளைஞன் தப்பியிருந்தார். இச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

மேலும் குறித்த துப்பாக்கி சூட்டு தாக்குதலை பொலிஸாரே மேற்கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டு பொதுவாக முன்வைக்கப் பட்டிருந்தது. இந்நிலையில் இது தொடர்பாக முப்படைகளினை சார்ந்தவர்களிடமும் விசாரணைகளானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி மண்டைதீவு கடற்படை முகாமிலும், பண்ணை பகுதியில் உள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முகாமிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ் விசாரணைகளினூடாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரே இத் துப்பாக்கி சூட்டு தாக்குதலை மேற்கொண்டிருந்தனர் எனவும் அவர்களது முகாமிலேயே இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி நிற்பதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அத்துடன் குறித்த சம்பவத்தன்று சம்பவ பகுதியில் குறித்த இரு வாகனங்களும் பயணித்த சீசீரிவி காணொளியும் ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இவ்வாறான நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் குற்றப் பலனாய்வு பிரிவினரிடம் பாரப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைவாக நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்தடைந்த குற்றப் புலனாய்வு பிரிவின் குழுவினர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதன்படி நேற்றுமாலை சுமார் 3 மணியளவில் இத் துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற மற்றைய நபரான நிஷாந்தனிடம் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சம்பவம் நடைபெற்ற இடத்திலும், உயிரிழந்தவரின் வீட்டிற்கும் அழைத்து சென்று விசாரணைகளை மேறகொண்டிருந்தனர்.

இவ் விசாரணை நடவடிக்கைகளானது மாலை 6 மணி வரை இடம்பெற்றிருந்த துடன் அதன் பின்னர் குறித்த நபரை அவரது வீட்டில் விட்டுவிட்டு சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (மு-4,9)

## மின்னல் தாக்கி...

ரும் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது வீரகெடிய - கல்போத்தயாய பிரதேசத்தினை சேர்ந்த 65 மற்றும் 30 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நாட்டில் சீரற்ற காலநிலை நிலவுவதால் பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்புடன் செயற்படுமாறு காலநிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது.(மு-11)

## இன்று முதல் கதவடைப்பு...

முதல்(30.10.2017) தொடர்ச்சியான நிர்வாக முடக்கல் போராட்டத்தினை (கதவடைப்பு) யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பிக்கவுள்ளனர்.

உணவு தவிர்ப்பில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை தொடர்பாக பல்கலை மாணவர்கள் ஜனாதிபதியுடன கலந்துரையாடியிருந்தனர். அதற்கமைய குறித்த விடயம் தொடர்பில் சாதகமான பதிலை கடந்த 25ஆம் திகதி வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால் குறிக்கப்பட்ட நாள் கடந்தும் ஜனாதிபதி எந்தவிதமான பதிலையும் வழங்காததால், மாணவர்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்திருந்தனர்.

இதன் எதிரொலியாக கைதிகளின் கோரிக்கை நிறைவேற்றபடும் வரை இந்த போராட்டம் தொடரவுள்ளதாகவும் விரைவில் இக் கோரிக்கை நிறைவேற்றபடாது விடின் ஏனைய பொது அமைப்புக்க்ளையும் இணைத்து பாரியளவில் இந்த போராட்டம் மேற்கொள்ளப்படும் என யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

அந்த வகையில் இன்று அனைத்து பீட மாணவர்களையும் யாழ் பல்கலை முன்றலில் காலை 8 மணிக்கு ஒன்றுகூடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (மு-4,9)

## அரசியல் கைதிகள்...

கடந்த 26ஆம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்றில் நகர்த்தல் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளோம். அதாவது அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நீதிமன்றுக்கு மாற்றச் சொல்லி அவ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதில் ஆகக் குறைந்தது 48 மணிநேரம் சட்டமா அதிபருக்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும். எனவே அவ் மனு இன்று திங்கட்கிழமை எடுக்கப்படவுள்ளது. அல்லது நாளை எடுக்கப்படும். அதில் ஒரே நாளில் தீர்ப்பு சொல்லப்பட வாய்ப்பு உள்ளது.

சிங்கள சட்டத்தரணி ஒருவர் மூலமே தாக்கல் செய்துள்ளோம். சிரேஷ்ட தமிழ் சட்டத்தரணிகளையும் சேர்க்கவுள்ளோம். இரண்டு ஒரு தினங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நிறைவடையும் என நம்புகிறோம் என்றார். (மு-60)

## இடைக்கால அறிக்கை...

விவாதத்தின் பின்னர் அது தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை கண்டறிவதற்கான பணி ஆரம்பமாகும்.

நடவடிக்கைக் குழுவின் இடைக்கால அறிக்கை அரசியல் யாப்புப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டமை இதன் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை சம்பிரதாய பூர்வமாக முதலாவது யாப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற நடைமுறைக்கே என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் நடவடிக்கை குழுவின் அறிக்கை குறித்து மஹாநாயக்க தேரர்கள் நாட்டின் பொதுமக்கள் வரையிலான அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களை, ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய, மஹாநாயக்க தேரர்களுக்கு, பேராயர்கள் தலைமையிலான கத்தோலிக்க சபை, மதத் தலைவர்கள் அரசியல் கட்சித் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களும் கேட்டறியப்பட உள்ளன.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை மீது விவாதம் நடத்தி புதிய அரசியலமைப்புக்கான வரைவு தயாரிக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-11)

## விமர்சகர்கள்...

கள் எதனையும் கேட்கவேண்டிய அவசியம் இல்லை என தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் விளக்கமளித்த போது அவர் இவ்வாறு கூறியதாக அதில் கலந்து கொண்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கொழும்பில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை சுமார் இரண்டு மணித்தியாலங்களாக இடம்பெற்றது.

இந்தக்கூட்டம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது. மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

ஏனைய கட்சி தலைவர்களும், இடைக்கால அறிக்கை மற்றும் சமகால அரசியல் நிலைமைகள் குறித்து கருத்துக்களை வெளியிட்டனர்.

இடைக்கால அறிக்கை தொடர்பாக ஊடகங்கள் வெளியிட்டு வருகின்ற கருத்துக்கள் காரசாரமான விமர்சனங்கள் தொடர்பாக மாவை சேனாதிராசா கடும் அதிருப்தி வெளியிட்டார்.

யாழ்.பல்கலைக்கழக கல்விச்சமூகம் இடைக்கால அறிக்கையை நிராகரித்தமை தொடர்பாக நேரடியாக கருத்து கூறாமல் எவரும் தமக்கு ஆலோசனை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்று மாவை சேனாதிராசா கூறியதாகவும்,

# வவுனியாவில் பணம் திருடிய சிறுவன் பொலிஸாரால் கைது!

(வவுனியா)

வவுனியாவில் வியாபார நிலையத்தில் பணத்திருட்டில் ஈடுபட்ட 15 வயது சிறுவன் ஒருவனை நேற்று மாலை 3.00 மணிக்கு வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்தனர்.

வவுனியா, தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள வியாபாரநிலையம் ஒன்றில் 67 ஆயிரம் ரூபாவை திருடியதாக குற்றஞ் சாட்டப்பட்ட சிறுவன் வியாபார நிலையத்தின் உரிமையாளரால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளான்.

குறித்த சிறுவன் கல்முனைப்பகுதியிலிருந்து வவுனியாவிற்கு வந்துள்ளதுடன் தனது தகப்பனார் அம்புலன்ஸ் சாரதியாக பணியாற்றுவதாகவும் தனக்கு ஏழு சகோதரர்கள் உள்ளதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளான்.

கடை உரிமையாளர் தாக்கியதன் காரணமாக சிறுவனின் தலையில் சிறிய காயம் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இச் சம்பவம் குறித்து வியாபார நிலையத்தின் உரிமையாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

விடுமுறை நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை கடையின் முன்னால் இருந்து கொண்டிருந்தேன். திடீரென கடையினுள் நுழைந்த குறிப்பிட்ட சிறுவன் பணம் வைக்கும் லாச்சியை திறந்து பணத்தை எடுத்து தனது சட்டைபையினுள் வைப்பதை கண்டேன். உடனடியாக சிறுவனை பிடித்து வைத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கினேன் என தெரிவித்தார். (மு-250)

# சிவனொளிபாதமலையை தமிழருக்கு கொடுக்க முடியாது

## நீதிமன்றம் செல்ல முயற்சி

(கொழும்பு)

சிங்கள மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் அம்பகமுவ சபைக்குட்பட்ட பகுதியிலிருந்து தமிழ் மக்கள் செறிந்து வாழும் மஸ்கெலியா பிரதேச சபைக்குள் புனித பூமியான சிவனொளிபாதமலை உள்வாங்கப்படுவதற்கு எதிராக நீதிமன்றம் செல்ல தயாராகி வருவதாக மலையக முற்போக்கு மக்கள் இயக்கத்தின் தலைவரும் முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினருமாகிய எலப்பிரிய நந்தராஜ் தெரிவித்தார்.

கினிகத்தேன பௌத்தவிகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித் தார்.

அம்பகமுவ பிரதேச சபை, மஸ்கெலியா நோர்வூட் மற்றும் அம்பகமுவ பிரதேச சபைகள் என மூன்றாக பிரிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பிரிக்கப்படுவதனால் சிங்கள மக்கள் அதிமாக வாழும் அம்பகமுவ பிரதேச சபை பகுதியிலிருந்து பிரிந்து சிவனொளிபாதமலை தமிழ் மக்கள் அதிகம் வாழும் மஸ்கெலியா பிரதேச சபை பகுதிக்குள உள்வாங்கப்படுவதனால் சிவனொளிபாதமலை சிங்கள் மக்கள் கைகளை விட்டு விலகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாட்டை அனுமதிக்க முடியாது. அவ்வாறு மஸ்கெலியா பிரதேச சபை பகுதிக்குள் சிவனொளிபாதமலை செல்லும் இடத்து அதற்கு எதிராக நீதிமன்ற உதவியை நாட நடவடிக்கை எடுத்து வருவதாவும் தற்போது மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் அம்பகமுவ பிரதேச சபை பிரிக்கப்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் ஒற்றுமை குலையும் வாய்ப்புகள் ஏற்படும் சூழ்நிலை காணப்படுவதனால் அம்பகமுவ பிரதேச சபையை துண்டாட அனுமதிக்க போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(மு-11)

அதேவேளை இடைக்கால அறிக்கை தொடர்பாக 90 சதவீதமான தமிழ் மக்களுக்கு எந்த விதமான அக்கறையும் இல்லை எனவும் பத்து சதவீதமானோரே அது பற்றி பேசுவதாகவும் புளொட் தலைவர் சித்தார்த்தன கூறியதாகவும் அறியவருகின்றது. (மு-11)

## அரசியலமைப்பை...

உருவாகி விடக் கூடாது என்பதில் கவனத்துடன் செயற்பட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு அமைவாக அரசியல் யாப்பை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஹட்டன் டன்பார் மைதானத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற **எங்கள் நிலத்தில் எங்கள் வீடு** என்ற பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாட்டு மக்களின் ஆணைக்கமைவாகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கப் படுவதற்கான தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்.

இந்த நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்க பொது மக்கள் வழங்கிய வரத்தினை கொண்டு இம்மக்களின் உரிமைகளுக்கு பாதகம் விளைவிக்காத நிலையில் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவது அவசியமான தேவையாகவும், நல்ல சந்தர்ப்பமாகவும் அமைந்துள்ளது.

அன்று மொழி பிரச்சினை இருந்ததால் தனிநாடு பிரச்சினை உருவாகியது. இதனால் 30 வருட யுத்தத்திற்கும் நாம் முகம் கொடுத்தோம். பல துன்பகரமான நிகழ்வுகளிலிருந்து தற்பொழுது மீண்டுள்ளோம்.

புதிய அரசியல் யாப்பு ஊடாக இந்த நாட்டில் ஒருமித்த மக்களாக மட்டுமன்றி உரிமை பெற்ற மக்களாக அனைவரையும் வழிநடத்த வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

கிடைத்திருக்கும் மக்களின் ஆணைக்கேற்ப அரசியல் யாப்பு திட்டங்களை உருவாக்கும் சந்தர்ப்பங்களை பிரயோசனப்படுத்த வேண்டும்.

பல வெளிநாடுகள் தமது நாடுகளை பிரித்தும், விலகியும் செல்ல முற்படுகின்றன. ஆனால் இலங்கையில் 2015ஆம் ஆண்டு நாட்டில் உள்ள சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பேகர் போன்றோர் மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கி நல்ல வரத்தினை அளித்துள்ளனர்.

அடி மட்டத்திலிருந்து ஆராய்ந்து ஒருமித்த கட்டமைப்பை உருவாக்கி மக்களின் சமாதான வாழ்க்கைக்கு வித்திடுவதை இலக்காக கொண்டு அனைவரையும் ஒன்றிணைத்து செயல்படும் செயலை நாம் முன்னிறுத்தி வருகின்றோம்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாக்களிக்கும் உரிமை கிடைத்தது. ஆனால் இவர்களுக்கு இடமோ, வீடோ அப்போது இருக்கவில்லை.

ஆனால் இந்த நாட்டின் பிரஜைகளாகிய இவர்கள் இன்று தமக்கென வீடுகளும், காணிகளும் சொந்தமாக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வரும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஏனைய சமூகத்தினருக்கு கிடைக்கும் சகல உரிமைகளும் இவர்களுக்கு கிடைத்திருக்கும் வேளையில் மேலும் இவைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது எமது நோக்கமாகும் என குறிப்பிட்டார். (மு-11)

## மகிந்த ராஜபக்ஷ...

உடனடியாக கைவிட வேண்டும் என்பதுடன் அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கையையும் கைவிடவேண்டும் என பௌத்த பீடங்கள் அறிவித்தமையை அடுத்து அரசமைப்பு விவகாரம் சர்ச்சைக்குரியதாக மாறியது.

பௌத்த பீடங்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் என நாளுக்கு நாள் எதிர்ப்புகள் வலுப்பெற்று வருகின்றன. இதனை தீவிர அரசியல் மயப்படுத்தும் முயற்சியில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான மகிந்த அணி ஈடுபட்டுள்ளது. (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-153)



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


# சில தினங்களுக்கு...



பாந்தோட்டை பகுதிகளுக்கு இன்று 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என அந்த நிலையம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசும். இடி மின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தாய், 3 பிள்ளைகளின்...

மூன்று பிள்ளைகளின் இறுதிச் சடங்குகள் நேற்று இடம்பெற்றன.

அரியாலையில் உள்ள அவர்களது வீட்டில் நேற்றுக் காலை இறுதி சடங்கு இடம்பெற்றதுடன் செம்மணி சுடலையில் தாயின் உடல் தகனம் செய்யப்பட்டதுடன், மூன்று பிள்ளைகளின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

நபரொருவருக்கு நம்பிக்கை அடிப்படையில் ஒரு கோடியே 17 இலட்சம் ரூபா நிதியை வழங்கியதாகவும் எனினும் அதனைப் பெற்ற நண்பர் மீள செலுத்த மறுத்த நிலையில், கடன் வழங்கிய குடும்பத் தலைவரான கிரிஷாந் என்பவர் கடந்த செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி தற்கொலை செய்துள்ளார்.

இந் நிலையில் கணவனை இழந்த பின்னர் மன உளைச சலுக்கு ஆளாகிய குடும்பத் தலைவியான 28 வயதான சுநேத்ரா என்ற பெண், தனது 3 பிள்ளைகளுடன் கடந்த வெள்ளிக் கிழமை தற்கொலை செய்து கொண்டனர் என்பது தெரிந்ததே. (மு-11)


## உயர் கலைக் கல்லூரி

[கொக்குவில், குளப்பிட்டிச்சந்தி]
A/L 2019, 2018, Day Class
அனைத்துதுறை மாணவர்களுக்குமான
யாழ்.பிரபல ஆசிரியர்
Mr.ஜெயந்தன்
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)
ஆரம்பம் : 01.11.2017 (3.00 - 5.00)
077 017 5346 (C-209)

## மணல் விற்பனைக்கு

ஆற்று மணல், பூச்சுமணல், அரிகல், யாழ்ப்பாண சல்லி, கருங்கல் சல்லி, கண்ட கல் வகை, மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
077 371 3000 (1181)

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11kg மேற்பட்ட பொதிகளுக்கு 1kg க்கான கட்டணம்
UK – 550/-, FRANCE – 700/-, GERMANY – 650/-,
SWISS – 750/-, CANADA – 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும் (1883)

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்**

- 216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
- 18, பிரதான வீதி, நெல்லியடி.

0777554528

aramex

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நினைவாராதனையும் திருப்பலி ஒப்புக்கொடுத்தலும்



பரந்தன் முரசுமோட்டை நவஜீவனத்தின் தொடக்குநரான வண.பிதா A.C தம்பிராசா அடிகளாரின் 35 ஆண்டு கால நினைவையொட்டியும் அடிகளாரோடு இணைந்து இறை பணியாற்றிய செல்வி எலிசபெத் பேக்கர் அம்மையாரின் நினைவாகவும் நவஜீவன இயக்குநராக பணியாற்றி மறைந்த த.கிருபானந்தராசா நினைவாகவும் முரசுமோட்டை நவஜீவன வளாகத்தில் அமைந்துள்ள புனித சிற்பாசாரி ஆலயத்தில் நவம்பர் 1 ஆம் நாள் மாலை 4.00 மணிக்கு நினைவாராதனையும் நன்றி திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் இடம்பெறும்.

(1168) நவஜீவன பழைய மாணவர்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்

கானான், தர்மபுரம், பரந்தன். - குடும்பத்தினர்

## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு



இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புகள் அதிகம்
0768226243
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்க விசா வெற்றியாளர் (C-153)

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
**V2 TRAVELS**

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரே | 10,பேருந்து நிலையம் | மூடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. சிங்கராசா வசந்தரூபன்**
M.Ed (HONS), M.A (District) BA, PGDE, Dip- in. F.Sc SPL.trd.F.Sc

எமது பாடசாலையில் மாணவரின் வளர்ச்சிக்காகவும் பாடசாலையின் முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் எம் ஆசிரியருக்கு 2017ஆம் ஆண்டின் மாகாண மட்ட நல்லாசிரியருக்கான "குரு பிரதீபா பிரபா" விருதினை கடந்த 28.10.2017இல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பெற்றதையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

(1180) பாடசாலை ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
மு/விசுவமடு மகா வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. சிவப்பிரகாசம் ரஜினிகாந்த்**
(B.A,Dip in Fsc,Trd.so.sc)
(ஆசிரியர் கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை)

அவர்கள் 28.10.2017 அன்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நல்லாசிரியருக்கான விருது வழங்கும் விழாவில் "குரு பிரதீபா பிரபா" விருதினைப்பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள், பதவியுயர்வுகளையும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : மனைவி, மகன், மாமா, அத்தை, மச்சான்மார், மச்சாள்மார், (C-210)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம் (C-206)

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
1, பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.